12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 16—7—1978 | இதழ் 45

புனித ராஜ்யம்

உடன்பிறப்பே,

ஒரு நாடகத்தின் தெருக் காட்சியை மட்டும் இந்தக் கடிதத்தில் தீட்டிக் காட்டுகிறேன். அடுத்தடுத்த காட்சிகள் எப்போது என்று அவசரப் படாதே. வேளை வரும்போது அந்தக் காட்சிகளும் சித்தரிக்கப்படும். பின்னர் ஒருநாள் அனைத்துக் காட்சிகளையும் தொகுத்து நீயே ஊருக்கு ஊர் சென்று சில நடிகர்களின் துணையுடன் அந்தச் சிறு நாடகத்தை நடித்துக் காட்டலாம். இப்போது முதல் காட்சியைக் காண்போம்; வா!

காட்சி-1

நாடகக் கொட்டகை, மக்கள் வெள்ளம் பொங்கி வழிகிறது. நாடகம் தொடங்குவதற்கு முன்பு இசைத் தட்டுகள் முழங்குகின்றன; சோடா, முறுக்கு வெற்றிலை பாக்கு, பீடி சிகரெட் என்று வியாபாரச் சிறுவர்கள் நாடகக் கொட்டகையில் மக்கள் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு அங்கு மிங்கும் அலைந்தவாறு இருக்கின்றனர். நடக்க இருக்கும் "புனித ராஜ்யம்" என்ற நாடகத்தின் கதைச் சுருக்கப் புத்தகங்களும் நாடகக் கொட்டகையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. நாடகம் ஆரம்பிக்க என்ன காரணத்தாலோ காலதாமதமாகிறது. குறித்தநேரம் தாண்டியும் நாடகம் தொடங்காததால் ரசிகர்களில் ஒரு பகுதியினர் பொறுமையிழந்து 'விசில்' ஒலியைக் கிளப்புகின்றனர். நீண்ட நேரம் பொறுமையைச்சோதித்த பிறகு, "டாண்! டாண்!" என்று நாடக மேடையில் மணி அலறுகிறது! அதனைத் தொடர்ந்து விளக்குகள் அணைந்து, மேடையிலும் கொட்டகையிலும் இருள் சூழ்கிறது.

அந்த இருள் மறைந்து ஒளி பரவுகிற வரையிலே நாடகத்தின் "கோரஸ்" பாட்டு கேட்டுக்கொண்டிருக்கிறது.

"ஊழல் என்பதை ஒழித்தே தீருவோம்; லஞ்சம் என்பதை அழித்தே தீருவோம்"

கொட்டகை அதிரும் வண்ணம் 'கோரஸ்' பாட்டு நீண்ட நேரம் பாடப்படுகிறது. இடையிடையே ரசிகர்களின் விசில் ஒலி!

ஒருவாறுஇருள் நீங்கி, விளக்குகள் எரிகின்றன. நாடக மேடையின் முகப்புத் திரை விலகுகிறது! அடுத்தது தெருக்காட்சி சித்தரிக்கப்பட்ட ஒரு திரை!

தடித்துப் பருத்த ஒரு ஆள், முரட்டு மீசைகளுடன், தள்ளாடி நடந்தவாறு வருகிறான். அவன் வாய், ஒரு பாடலை முணுமுணுக்கிறது.

'நிறையக் குடிச்சாலும் நிதானம் தவற மாட்டேன்; நெருப்புப் பெட்டி எங்கே வச்சேன்?"

இந்தப்பாட்டைஅவன் திரும்பதிரும்ப அபஸ்வரத்தில் பாடுவதைக் கேட்டு, ரசிகப் பெருமக்கள் ஆரவாரம் செய்கிறார்கள்.

அப்போது "என்ன அண்ணாச்சி! எதைத் தேடிகிட்டிருக்கே தெருவிலே?" என்று கேட்டவாறு மெலிந்த உடல் கொண்ட ஒரு வாலிபன் வருகிறான், அண்ணாச்சி அந்த வாலிபனை உற்றுப் பார்க்கிறான். அவனைச் சுற்றிச்சுற்றி வருகிறான்.

அண்ணாச்சி: அடே! பொடியா! வாடா, வா! நல்லசமயத்திலே வந்தே!

பொடியன்: அண்ணாச்சி! என்ன வாயிலே ரொம்ப நாறுது!

அண்ணாச்சி: பொடியா! மணக்குதுன்னு சொல்லுடா! மது மணமடா, மது மணம்!

பொடியன்: என்னஅண்ணாச்சி அக்கிரமம் இது! இப்பத்தானே மதுவிலக்கு மாநாட்டிலே "மதுவை ஒழித்தே தீரவேண்டும்" என்று மார்தட்டிப் பேசினே? அதுக்குள்ளே ஆளே மதுக்குடமா ஆயிட்டியே?

அண்ணாச்சி: முட்டாளே, கேளுடா! மாநாட்டிலே பேசிட்டுப் புறப்பட்டேனா? புறப்பட்டு வந்தவழியிலே என் நண்பன் வீட்டுக்குப் போனேன். அவன் மேஜைமேலே ஒரு 'பிராந்தி''ப் பாட்டிலை வச்சுக்கிட்டு வாடாவான்னு என்னைக் கூப்பிட்டான். அந்தப் பாட்டிலைப் பார்த்ததும் அதை ஒழித்தே தீரணும்னு நெனைச்சேன். எப்படி ஒழிப்பது? சிந்தனை செய்தேன்! எடுத்



கலைஞர் கடிதம்

தேன் பாட்டிலே! கவிழ்த்தேன் என் வாயில்! மது ஒழிந்தது! மதுஒழிந்தது! இப்ப நீ என்னடா சொல்றே? மதுவைஒழிப்போம் என்று வாயளவில் பேசினால் போதுமா? என்னைப் போலச் செயலில் அல்லவா காட்டவேண்டும்?

(இந்த வசனத்தைக் கேட்டு, நாடகக் கொட்டகையில் இருந்த ரசிகப் பெருமக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் விண்ணைப் பிளந்தது)

பொடியன். அண்ணாச்சி! நான் கூட மதுவை எப்படி ஒழிக்க முடியும்என்று தெரியாமல் இதுவரையில் தவித்துக்கொண்டிருந்தேன். நீ அதற்கு ஒரு வழி கண்டுபிடித்து விட்டாய்' சரியான வழி! நானும் இப்போதே உன் முன்னிலையில் சபதம் எடுத்துக் கொள்கிறேன். சாராயம் காய்ச்சப் பயன்படுகிற எந்தப் பொருளாக இருந்தாலும் அவற்றை அழிப்பதையே குறிக்கோளாகக் கொள்வேன்! அவற்றைச் சேகரித்துக் கொப்பரைகளிலே போட்டுக் கசக்கிப் பிழிந்து கொதிக்க வைப்பேன்! அந்தக் கொடிய மதுபானத்தை நாட்டிலே விட்டு வைக்காமல்—அனைவரையும் குடிக்கச் செய்வதின் மூலம் மதுவை ஒழிப்பேன். ஒழித்தே தீருவேன்! எப்படி அண்ணாச்சி என் திட்டம்?

அண்ணாச்சி: அருமையான திட்டம்—நான் ரொம்ப நாளா நடத்திகிட்டிருக்கிற திட்டம், வாடா வா! நீயும் என்னோடே பங்குதாரனாகச் சேர்ந்துக்கலாம். சட்ட சபையிலே கூட ஒருத்தர் பேசியிருக்கார் பார்த்தியா? முன்னெல்லாம் போலீஸ்காரர்கள் சாராயம் காய்ச்சினார்கள் என்றும் இப்போது பொது மக்களே பலபேர் அந்தத் தொழிலை நடத்துகிறார்கள் என்றும் பேசியிருக்கிறாரே! அந்தப் பொது மக்கள் யாருடா? யாரு? நாம்தானே அந்தப் பொது மக்கள்?

பொடியன்: ஆமாம்! ஆமாம்! புனித ராஜயத்தின்

(தொடர்ச்சி 12-ம்பக்கம்)

இளம் துருக்கியர்...

இன்று உலகில் அரசியலை ஓரளவு புரிந்து கொண்டவர்கள் அனைவரும் "இளம் துருக்கியர்" (young Turks) என்ற சொற்றொடரின் பொருளைப் புரிந்து கொண்டு அந்த வாசகங்களை சமயம் வாய்க்கும் போதெல்லாம் பயன்படுத்துவதை அனைவரும் அறிவோம். நம் நாட்டில் கூட இந்திரா தலைமை அமைச்சராக இருந்த சமயத்தில் அவருக்கு எதிர்ப்பாக அவருடைய இயக்கத்திலேயே புரட்சிக் கருத்துக்களைத் தூவி வந்தவர்களில் முக்கியமானவர்கள் திரு. சந்திரசேகர். (இன்றைய ஜனதா கட்சியின் தலைவர்) திரு மோகன் தாரியா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். அவர்கள் இந்திரா காங்கிரஸ் வட்டாரத்திலும், எதிர்முகாம்களிலும் ஏன் பத்திரிகையாளர் வட்டாரங்களிலும் "இளம் துருக்கியர்' (young Turks) என்று அழைக்கப்பட்டார்கள். இந்த இளம் துருக்கியர் என்ற வாசகம் எவ்வாறு தோன்றியது என்பதை ஆராய்வோம்.

துருக்கியை ஆண்டு வந்த சுல்தானுடைய பிற்போக்குக் கொள்கைகளையுடைய ஆட்சி முற்போக்கு கொள்கைகளுக்கு ஊற்றுக் கண்ணாக விளங்கிய இளைஞர்களாலும், பெரியவர்களாலும் எதிர்த்து வெறுக்கப்பட்டது முற்போக்கு எண்ணங்களின் முன்னோடிகளான இளைஞர்கள் மேற்கத்திய நாடுகளின் தேசிய உணர்ச்சியையும், ஜனநாயகத்தன்மைகளையும் பரிபூரணமாக உணர்ந்து போற்றிய காரணத்தால் சுல்தானின் எதேச்சதிகாரப்போக்குடைய ஆட்சியை அவர்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

துருக்கியில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் முழு முதற்காரணமாக விளங்கியவர் முஸ்தாபா கமால்பாட்சா என்பதை அனைவரும் அறிவர். நாட்டின் நெருக்கடியான அத்தருணத்தில் துருக்கியில் இருந்த ஆட்சி முறையை இங்கிலாந்து நாட்டு ஆட்சி முறையைப்போல்சட்ட வரம்புகளுக்குட்பட்டு மாற்றியமைத்திட வேண்டுமென்னும் அவா கொண்டு கொண்டாற்றத்தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்தான் முஸ்தாபா கமால்பாட்சா ஆவார் ஆகவே அவர் சுல்தானின் ஆட்சி பொறுப்பில் பற்கேற்றார். இடையில் சிறிது காலம் விலகியிருந்தார். மீண்டும் 1896-ல் அப்பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்.

ஆனாலும் அவருடைய உள்ளத்தில் ஜனநாயக உணர்வுகளும்; சுதந்தர உணர்வுகளும் பொங்கி எழுந்தன சுதந்திரம் பெரிதா? பதவி பெரிதா? என்ற கேள்விக் குறியைத் தம் உள்ளத்தில் எழுப்பி அதற்கு விடை காணும் விதத்தில் சுல்தானின் ஆட்சியில் அங்கம் வகித்து வந்த பொறுப்பு மிக்க பதவியைத் துறந்தார். பதவியை துறந்தாரேயொழிய சுதந்தர எண்ணங்களை துறந்தாரில்லை. மக்கள் மத்தியில் சுதந்திர உணர்வுகளை தூவி வளர்க்க முனைந்திட்டார். ஆகவே அவரைப் பின்பற்றி ஏராளமான துருக்கிய இளைஞர்களும், முதியவர்களும் பின் தொடர ஆரம்பித்தனர்!

அச்சமயத்தில்தான் துருக்கியில் மேலும் கமால்பாட்சாவை விட முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள் பலர் ரகசிய மன்றங்களை உருவாக்கிக்கொண்டு, தேசிய

★★★★★-★★★★★★

-:அருள் வடிவு:-

★★★★★!★★★★★★

அரசாங்கம் ஒன்றினை உருவாக்கிட மிகவும் தீவிரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களைத்தான் பிற்காலத்தில் துருக்கியில் "இளம் துருக்கியர்" (young Turks) என்று அழைத்தனர். நாடு கடத்தப்பட்டிருக்க இளம் துருக்கியர் பலர் குடியரசை நிறுவுவதற்கும். அரசியல் சட்ட திட்டத்தை உருவாக்கிடவும் ரகசியத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டிக்கொண்டிருந்தனர்;

1905-ஆம் ஆண்டில் தோன்றிய சீர்திருத்த இயக்கம் அட்டாமான் சாம்ராஜ்ஜியத்திற்குள்ளாகவே தோன்றி பார்ஸிலிருந்து துண்டித்துக்கொண்டு சுதந்தரமாக இயங்கியதோடு தனித்தனி பாகக் குழுக்களை உருவாக்கிக்கொண்டு அதன் தலைமைப் பீடத்தை சலோனிகா என்ற இடத்தில் அமைத்துக் கொண்டனர்.

மாசிடோனியாவில் குழப்பம் நிலவிய நேரத்தில் பெரிய நாடுகள் தலையிட முயற்சித்தன. ஆனால் இளம் துருக்கியர்கள் அந்த நேரத்தில் உறுதியாக அதை எதிர்த்ததோடு துணிவாக அறிவித்ததாவது. "துருக்கியர்கள் தங்களுக்குத் தேவையான சீர்திருத்தங்களை தங்களுக்குள்ளாகவே செய்து கொள்ள வேண்டுமேயொழிய, அந்நியர் தலையீட்டுக்கு ஒருபோதும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்' என்றும் தெளிவாகவே தெரிவித்து விட்டார்கள். மாசி

(11-ம் பக்கம் பார்க்க)

திறமையற்ற விமானிகளால் பாழாகும் பல இலட்சம் ரூபாய்!

இந்திய விமானப் படைத் துறையில் விபத்துக்கள் அதிகரித்து வருவது கண்டு யாரும் வருத்தப்படாமல் இருக்க முடியாது. இந்த ஆண்டு பிப்ரவரி- மார்ச் மாதங்களுக்கிடையே மட்டும் பன்னிரண்டு விபத்துக்கள் நடந்துள்ளன தொடர்ந்து கடந்த பத்தாண்டு காலமாக நடைபெற்று வரும் விபத்துக்களால் பல அதிகாரிகளும், தொழில் வல்லுநர்களும், விமான ஓட்டிகளும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

அண்மையில் விமானப் படைத் துறையைச் சேர்ந்த 'T. U – 124' என்ற விமானம் விபத்துக்குள்ளானபோது அதிலிருந்த விமான ஓட்டிகள் உயிரிழந்தார்கள். அதில் பயணம் செய்த தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய், நல்ல வேளையாக — பிழைத்துக் கொண்டார்!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் நடந்தபோதுஇந்தியா இழந்த விமானங்களைவிட விபத்துக்களால் இழந்த விமானங்களின் எண்ணிக்கை அதிகம் என்று சொல்லப்படுகிறது.

பெரும்பான்மையான விபத்துக்கள் கவனக் குறைவாலும், திறமையின்மையாலுமே நடந்துள்ளன என்பதை விபத்துக்குறித்து நடக்கும் விசாரணை முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

விமானியாக ஒருவரைப் பயிற்றுவிக்க அரசாங்கத்திற்கு ஏறத்தாழ இருபத்தி மூன்று லட்ச ரூபாய் செலவாகிறது எனச் சொல்லப்படுகிறது.

திறமையற்ற ஒருவரைத் தேர்ந்தெடுத்து இவ்வளவு பணத்தைக் 'கொட்டி'ப் பயிற்றுவித்துப் பயன் என்ன?

நாட்டுப் பாதுகாப்பிற்காக இருக்கும் படைத்துறைகளிலாவது சிபார்சு, இலஞ்சம்- போன்றவைற்றை தவிர்த்து- உண்மையிலேயே திறமை வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டாமா?

மீண்டும் ஹைதராபாத்தில் ஒரு 'பெரும் புயல்'!

பெல்லர்பள்ளியில் இருக்கும் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை பார்க்கும் ஒரு ஊழியர், வெங்கடேஷ் என்பவர்.

அவருடைய மனைவியான இராசேசுவரியின் சடலம் ஒரு மரமொன்றில் தூக்கிலிடப்பட்டது போல் ஊசலாடிக் கொண்டிருந்தது.

சிங்கரேனி நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை பார்க்கும் ஒரு அதிகாரியின் மகன் இராசேசுவரியைக் கற்பழித்த பிறகு, அவளைக் கொலை செய்து 'அவளாகத் தூக்கிட்டுக் கொண்டு செத்து விட்டாள்' என்று பிறரை நம்பச் செய்வதற்காக மரத்தில் அவளது சடலத்தைத் தொங்க விட்டான் என்று நகர் முழுக்கப் பரவலாகப் பேசப்பட்டது

வெங்கடேஷ் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்து அதிகாரியின் மகனை உடனே கைது செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினர்.

இராசேசுவரியின் சடலம் பெல்லம்பள்ளி மருத்துவ விடுதிக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

அப்போது எராளமான ஆண்களும், பெண்களும் கூடி 'பிரேத விசாரணையை மாவட்ட மருத்துவ அதிகாரியின் முன் நடத்த வேண்டும் என்று குரலெழுப்பினர்கள்.

ஏனென்றால்—

உள்ளூர் மருத்துவவிடுதியின் மருத்துவர்கள் அதிகாரிக்கு வேண்டியவர்கள் என்றும் ஆகவே அவர்கள் அதிகாரியின் மகனை காப்பாற்றுவதற்காகப் பொய்யான தகவல்கள் தரக்கூடும் என்றும் மக்கள் ஒருசேரக் கூறினர்கள்.

மக்களின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது-

ஆயிரக் கணக்கான மக்கள் ஒன்றுகூடி தெருவில் முழக்கமிட்டுக் கொண்டே போனர்கள்:

" அதிகாரியின் மகனைக் கைது செய்! மாவட்ட மருத்துவ அதிகாரியின் முன் மறு பிரேத விசாரணை செய் !" என்று.

பேருந்து நிலையம் அருகே மக்கள் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

தொடர்ந்து ஊர்வலம் செல்ல அனுமதிக்குமாறு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

அங்கு வந்த இணை மாவட்ட ஆட்சியாளர் மக்களோடு பேசி அவர்களின் கோரிக்கையைக் கேட்பதற்குப் பதிலாக—துப்பாக்கிச் சூடு நடத்தச் சொல்லி ஆணையிட்டார்.

துப்பாக்கிச் சூட்டின்போது மூவர் கொல்லப்பட்டார்கள் ஒரு பெண் உட்பட ஆறுபேர் படுகாயமடைந்தனர்.

காவலர்கள்-இணை மாவட்ட ஆட்சியாளர் ஆகியோரின் அநீதியான போக்கு குறித்து ஒரு பொது நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று மகளிர் அமைப்புக்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ஹைதராபாத்தில் ரமீசா என்ற பெண் காவலர்களால் கற்பழிக்கப்பட்ட போது மக்கள் பெருத்த ஆர்ப்பாட்ட மொன்றை அண்மையில் நடத்தினர்கள்.

இராசேசுவரியின் 'விவகாரம் ஹைதராபாத்தில் மீண்டும் ஒரு 'பெரும் புயலை' எழுப்பியுள்ளது.

நெஞ்சில் நிறைந்தவர்கள்!

அஞ்சாநெஞ்சன்!

அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியின் பொது வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பத்துக்கு ஒரு மாரியம்மன் கோவில் பூசாரியே மூலகாரணமாக இருந்தார் என்பது வியப்புக்குரியதாக இருக்கிறதல்லவா?

எப்படி, பார்ப்போம்!

பட்டுக் கோட்டையில் ஒரு மாரியம்மன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயில் பூசாரியின் பெயர் பக்கிரி சட்டாம் பிள்ளை! அவர் முறையாகத்தமிழ் படித்தவர் அவருக்குஇசைப் பயிற்சியும் உண்டு. மிருதங்கம், கஞ்சிரா முதலிய இசைக் கருவிகளையும் வாசிக்கத் தெரியும்; கூர்மையான அறிவுடையவர்.

அந்தப் பூசாரியுடன் எப்படியோ அழகிரிக்கு நட்பு ஏற்பட்டு விட்டது. இருவரும் அடிக்கடி சந்தித்து அளவளாவி மகிழ்வது வழக்கம் பூசை நேரம் போக மீதி நேரமெல்லாம் அழகிரியுடனேயே இருந்து அவரது சிந்தனையைக் கிளறிக்கொண்டிருப்பது பூசாரியின் அன்றாடப் பொழுதுபோக்காகிவிட்டது. அழகிரிக்கும் உண்ணும் நேரம் போக எஞ்சிய நேரமெல்லாம் மாரியம்மன் கோவிலே இருப்பிடமாகி விட்டது. மொத்தத்தில் மாரியம்மன் கோவிலே பகுத்தறிவுப் பாசறையாகி விட்டது எனலாம்.

பூசாரித் தொழிலில் உள்ள இரகசியங்களையெல்லாம் அழகிரிக்குக் கூறிவிட்டார் பூசாரி. 'கடவுளைக் கல்லாக வைத்திருப்பதே பூசாரிகளின் பிழைப்புக்காகத்தான்; எங்கள் பிழைப்புக்காக உருவாக்கி வைக்கப்பட்டுள்ள கற்சிலைகளைக் கடவுள் அல்ல என்று எப்படி நாங்கள் கூறுவோம்' இப்படிச் சொல்லுவாரராம் பூசாரி.

இத்தோடு விட்டாரா? இன்னும் அவருடைய கூற்றைக் கவனியுங்கள்.

"இலட்சக் கணக்கில் பணத்தைச் செலவிட்டு, கோவில்களைக் கட்டிய அரசர்கள் மூல விக்கிரகத்தை மட்டும் ஏன் கல்லாலே செய்து வைத்திருக்கிறார்கள் தெரியுமா? மூல விக்கிரகத்தை வெள்ளியிலோ தங்கத்திலோ செய்து வைத்திருந்தால், நாள் தோறும் கொஞ்சம் கொஞ்சமாக அவைகளைச் செதுக்கி விற்றுவிட்டிருப்பார்கள். கடைசியிலே கோயில்களில் சிலைகளே இல்லாமல்போயிருக்கும்."

பூசாரியின், இத்தகைய விளக்கங்களையெல்லாம் கேட்டுக் கேட்டு அழகிரியே புதிய மனிதராக மாறிவிட்டார் என்பதை அவரது நடைமுறைகளே நாட்டுக்குக் காட்டின.

அந்தப் பூசாரி அழகிரியை 'எசமான்' என்றுதான் கூப்பிடுவது வழக்கமாம்.

ஒருநாள் பூசாரியின் கைச்செலவுக்குக் காசில்லை. பக்தர்களிடமெல்லாம் சென்று காணிக்கை கேட்டு வெறுங்கையுடன் திரும்ப நேர்ந்தது. அப்போது, கோயிலில் இருந்த உண்டியலைத் திறந்து பார்த்தார். அதற்குள் ஒரு பாம்புதான் படுத்திருந்ததே தவிர காசு இல்லை!

அதைக்கண்டதும் பூசாரிக்கு ஆத்திரம் பிறந்து இரைச்சலிட்டார். அதைக்கேட்டு அழகிரி என்னய்யா சட்டாம்பிள்ளை, ஏன் கூச்சலிடுகிறீர்? என்று கேட்டார்.

அதற்குப் பூசாரி,

'கடல் வத்திக் கருவாடு தின்னக் குடல் வத்திச் செத்ததாம் கொக்கு'

—என்று உவமை நயத்தோடு தனது நிலையை எடுத்துக் கூறினாராம். அழகிரி, இந்த உவமையைத் தாம் சாகும்வரை அடிக்கடி பயன்படுத்தத் தவறியதில்லை.

சென்ற இதழ் தொடர்ச்சி

இது மட்டுமல்ல;

இரத கஜ துரக பதாதிகள் — ஒட்டை உடைசல் ஈயம் பித்தளை — தகரப்போணி-டண்டணார் டண் — இப்படிப்பட்ட சொற்களெல்லாம் அழகிரியின் பேச்சில் அடிக்கடி வந்து விழும்

வைதீகக் கோட்டையான காமாட்சி நாயக்கன்பாளையம், அழகிரியின் மாறுபட்ட மனப்போக்குக்கு ஒத்துக்கொள்ளவில்லை. எனவே, அவர் தம் குடும்பத்துடன் வெளியேறிவிட்டார். ஆனாலும் மாரியம்மன் கோயிலை அவர் விட்டுவிடவில்லை!

அழகிரியின் இயல்புகளும் அவரது பேச்சும், பட்டுக்கோட்டையிலுள்ள 'மேட்டுக்குடி'யினரின் பகையை எளிதில் உண்டாக்கிக் கொடுத்துவிட்டன அந்தப் பகையினால் அழகிரிக்கு எவ்விதத் தீங்கும் நேராமல் பக்கத் துணையாக இருந்து உதவியதோழர்கள் கன்னையன், சௌரிராஜன், விசுவநாதம், (அண்மையில் காலமான) பேராவூரணி குழந்தைதேவிஸ் மருதமுத்து, பேட்டை தருமலிங்கம் போன்றவர்கள் ஆவார்கள்.

வறுமையுடன் போராடிக்கொண்டே வைதிகபுரியை எதிர்த்துப் பகுத்தறிவுக் கணை தொடுக்கும் போரையும் நடத்திக்கொண்டு வந்தார் அழகிரி. அவருடைய உற்ற துணையாக அமைந்த தோழர்கள் அவருடைய குறிப்பறிந்து உதவி புரிந்து வந்தனர்.

அழகிரியின் நகைச்சுவை கலந்த அறிவுரைகளும், வெள்ளை உள்ளமும், ஏழைகளைக்கண்டு இரங்கும் நெஞ்சமும், அனைவரையும் வேற்றுமை பாராது சமமாகக் கருதும் இயல்பும், பல இளைஞர்களை அவர்பால் ஈர்த்தன. இப்படி நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அழகிரியின் பகுத்தறிவுப் படை வீரர்களாகத் திகழ்ந்

★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★

தனர். இந்த நிலையில் தந்தை பெரியாரின் ஈரோட்டுப் பாசறையில் அழகிரி தன்னை ஒரு தளபதியாக ஆக்கிக்கொண்டுவிட்டார்.

பண பலமிக்க பண்ணையார்களுக்கெல்லா மரியாதைகளும் கிடைத்து வந்த தஞ்சை மாவட்டத்தில், பராரியாக இருந்தசாதாரண மனிதரான அழகிரியைக் கண்டால்சிறுபிள்ளை முதல், பெரியவர்கள்வரை அன்பும் மரியாதையும் காட்டுகிறார்கள்; அவர் பின்னாலே நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தொடர்ந்து செல்கிறார்கள் என்றால், அதனைக்கண்டு பொறுத்துக் கொள்ள முடியுமா 'பெரிய மனிதர்'களால்? பொதுமக்களிடையே அழகிரிக்குச் செல்வாக்கு ஏற, ஏற மிட்டாமிராசுகளின் பகை வேகமாக வளர்ந்தது.

யாருடைய பகையையும் கண்டு அவர் அஞ்சவில்லை; பணபலத்திடம் அவர் அப்போது பணிந்திருந்தால் அவரும், அவரது குடும்பமும் 'சுகவாழ்வு' பெற்றிருக்க முடியும்.

'வறுமை என்னை வாட்டினாலும், பட்டினிக்கு என் குடும்பம் பலியானாலும், கவலை இல்லை. கொள்கையைப் பணத்துக்காகப் பலியிட்டுவிட்டான் அழகிரி என்ற பழிச் சொல் என்னையும், என் மக்களையும் சாராமல் இருந்தால் போதும்' என்று சொல்லி, செல்வர்கள் விரித்த வஞ்சக வலையில் சிக்காமல் கடைசி வரை வாழ்ந்தார்!

அப்போது நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த சர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் மீது அழகிரி அளவு கடந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தார். பன்னீர் செல்வத்தின் தூய தொண்டு அவரைக் கவர்ந்தது. தஞ்சை மாவட்ட ஆட்சி மன்றத் (ஜில்லா போர்டு) தலைவராக பன்னீர்செல்வம் இருந்த காலத்தில்தான், இராசா மடம், உரத்த நாடு ஆகிய இடங்களில் உள்ள தர்ம சத்திரங்களில் பார்ப்பன வகுப்பாருக்கு மட்டுமே இலவச உணவு படைக்கப்பட்ட கொடுமையை மாற்றி எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் உணவளிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது மேலும் இப்படிப்பட்ட பல நற்பணிகளைப் பன்னீர் செல்வம் செய்திருக்கிறார்.

பெரிய பெரிய மிட்டா மிராசுதார் ஜமீன்தார்கள், ராஜாக்கள் போன்ற செல்வர்களின் நட்பு தமக்கு இருந்தபோதிலும். அவர்களுடைய தயவுக்காக அழகிரி தமது போக்கை மாற்றிக்கொண்டதில்லை தமது கொள்கையை விட்டுக் கொடுக்காமல் அதே நேரத்தில் சிறிதும் மரியாதை குறையாமல் அனைவரிடமும் பண்புடன் பழகி வந்தார்.

அழகிரியிடம் பணக்காரர்களுக்கு அச்சமும் இருந்தது; அதே நேரத்தில் அவரது பேச்சாற்றலில் அவர்களுக்கு நம்பிக்கையும் இருந்தது செல்வர்களின் மாளிகைகளிலே அழகிரிக்கு 'இராஜோபசாரம்' நடக்கும் ஆனாலும் அதனை அழகிரி விரும்புவதில்லை; அப்படிப்பட்ட இடங்களில் அவர் தங்குவதுமில்லை. வீட்டிலே வெறும் நீரும் சோறும் உண்டு, திண்ணையிலே படுத்துறங்கி ஏழை எளிய மக்களிடையே கலந்துறவாடுவதையே அவர் என்றும் விரும்பினார்

சுயமரியாதை இயக்கச் சூறாவளிப் பிரசாரத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தமிழ் நாட்டின் பட்டி தொட்டி யெங்கும் சுற்றிச் சுழன்று வந்த அழகிரி நீதிக் கட்சியிலும் பின்னர் திராவிடர் கழகத்திலும் முன்னணி வீரர்கள் வரிசையிலே தனியிடம் பெற்றுத் திகழ்ந்தார்

நாவன்மைமிக்க சொற்பொழிவாளராகத் திகழ்ந்த அழகிரியைப் பார்க்கவும், அவரது பேச்சைக் கேட்கவும் மக்கள் ஆவலுடன்வந்து கூடுவர்; அவர் தமது பேச்சுக்கிடையே எடுத்துரைக்கும் நகைச்சுவை மிக்க உவமைகளை இன்று நினைத்தாலும் சிரிப்பு வரும். மக்களைச் சிரிக்க வைத்துச் சிந்திக்கச் செய்தவர் அவர்.

ஒரு காலத்தில் மிட்டாமிராசுகளின் மாளிகைகளுக்குள் இருந்துவந்த நீதிக்கட்சியை நடுவீதிக்குக் கொண்டுவந்து மக்கள் கட்சியாக மாற்றிய பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு அதற்கு அஞ்சா நெஞ்சன் அழகிரி, பேரறிஞர் அண்ணா போன்றவர்களின் பேச்சாற்றலும் பிரசாரப்பணியும் உறுதுணையாக இருந்தன என்றால் மிகையாகாது

1935-ஆம் ஆண்டு இலங்கைக்குச்செல்லும் வாய்ப்பு அழகிரிக்குக் கிட்டியது. இலங்கைச் சட்டமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட ஆமில்டன் துரைக்கும். திருமதி இராசரத்தினத்துக்கும் தேர்தல் பிரசாரம் செய்வதற்காக அழகிரி அழைக்கப்பட்டிருந்தார். அழகிரியுடன் நாகை என். பி. காளியப்பன், நாடியம் குழந்தை, முசிறி கந்தசாமி, மதுரை அருணாசலம் ஆகிய சு. ம. இயக்கத் தோழர்களும் சென்றிருந்தார்கள்.

இலங்கையில் தம் தோழர்களுடன் ஒரு மாத காலம் தங்கியிருந்த அழகிரி, இருபத்தைந்துக்கு மேற்பட்ட பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டார். அந்தக்கூட்டங்களிலெல்லாம் அவர் என்ன பேசினார் தெரியுமா? ஆமில்டன் துரைக்கு வாக்களியுங்கள் என்று கேட்டுக்கொண்டார்? அதுதான் இல்லை பக்குவமாக சுயமரியாதை இயக்கக் கருத்துக்களைத்தான் பேசிவிட்டுத் திரும்பினார்.

1939-ஆம் ஆண்டு மூண்ட இரண்டாவது உலகப்போரின்போது போர்ப் பிரசாரப்பணியில் பங்கு கொண்டார் அழகிரி அன்றைய சென்னை மாகாணத்தின் தலைமைப் போர்ப் பிரசாரகராகப் பொறுப்பேற்றார்.

போர்ப் பிரசாரக் கூட்டங்களிலும் அழகிரி தமது கொள்கைப் பிரசாரத்தை விட்டு

(10-ம் பக்கம் பார்க்க)

ஓராண்டுச் சாதனை

சாராய ஓடையில் செல்லும் ஆட்சி ஓடம்!

ஓராண்டாம்...சாதனையாம்...!

விழா எடுக்கிறது நடிக முதல்வரின் ஆட்சி!

இதோ பாருங்கள்.

உழவர்களுக்கு போனஸ் கிடைத்து விட்டது, உரவகைகள் இனமாகக் கிடைக்கின்றன

அஞ்சல் அட்டை ஆறு காசு தான்;

அஞ்சலகங்களில் அண்டா குண்டான்களை அடகுவைத்து ஏழை உழவர்கள் வட்டியின்றிக் கடன்களை வாங்கிப் போகின்றார்கள்;

பதினாயிரம் நியாயவிலைக் கடைகள், பார்க்கும் இடமெல்லாம் தெரிகின்றன. என்றெல்லாம் சொன்ன சாதனைகளைச் செய்துவிட்டு ஓராண்டுச் சாதனையைப் பாருங்கள்; என்று ஓலமிட வந்திருக்க வேண்டும்.

வாக்குறுதி தருவதே வள்ளலின் குணம் என்று நம்பிய மக்கள் 'வாய்தான் வாழைப் பழம் கையோ கருணைக் கிழங்கு' என்னும் பழமொழியை நினைந்து-நினைந்து தலையில் அடித்துக் கொள்ளுகிறார்கள்.

உலகத்திலேயே,

'தேர்தல் காலம் பேச்சுக்களை மேடையோடு மறந்து விட வேண்டும்' என்று போதனை செய்யும் 'கலியுக புத்தனை முதலமைச்சராகப் பெற்ற நாடு தமிழ் நாடு ஒன்றுதான் இருக்க முடியும்.

உழைப்போர்; உழவர்; ஆசிரியர், அலுவல் புரியும் அரசு ஊழியர் என எல்லாத் தரப்பினரும் போராட்டம் செய்யும்போது பொது மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்பதில் நம் முதல்வர் சாதனைகளைச் செய்திருப்பது உண்மை!

'ஏன் என்றால்' சதி வழக்கு.

'இம் என்றால் கொலை வழக்கு என்று' சர்வாதிகாரச் சாதனைகள் புரிவதில் நம் முதல்வருக்கு ஈடாக வாழ்ந்தவர்களும் இல்லை; வாழ்பவரும் இல்லை; இந்த மண்.

இதுவரையில் பாதி நேரம் நடிப்பு; மீதி நேரம் கோப்பு; இடையில் இருக்குமே ஓய்வு என்று சாதனை புரிந்த ஒருவரை முதல்வராக நாடு இன்று வரை கண்டதில்லை; இனி என்றும் காணப் போவதும் இல்லை.

கண்களை மூடிக்கொண்டு.

காதுகளை அடைத்துக் கொண்டு, வாயாலேயே ஊழல் அற்ற ஆட்சியை நடத்திக் கொண்டு வரும் முதல்வரை இந்நாடு பெற்றதே, நாடு செய்த சாதனைதானே

இதைவிடச் சாதனை வேறு வேண்டுமா, என்ன!

எல்லாவற்றையும்விட,

ஓராண்டுச்சாதனை கொண்டாடப்படும் இந்த வேளையில் உலகமே கண்டு நகைக்கும் ஒரு பெரும் சாதனை சிங்காரச் சென்னையில் நடைபெறுகிறது

'மதியை வளர்ப்பேன், மதுவை ஒழிப்பேன்' என்று எவரோ எழுதிய பாட்டுக்கு வாயசைத்து நடித்து ஒழுக்கப் போதனை செய்ய விருக்கும் முதலமைச்சர் வாழும் சென்னையில் தெருவுக்குத் தெரு சாராயம் ஆறாக ஓடுகிறது

எல்லாப் படைகளும் இருக்கும் சென்னையில் சாராயவீரர்களின் சண்டையை அடக்க முடியவில்லையென்றால் அதுவும் ஒரு சாதனைதானே.

ஒரு நாளல்ல; இரண்டு நாளல்ல; ஐந்தாறு நாட்களாய்ப் பகல் இரவு என்றில்லாமல் விற்பனைத் துறையில் வெற்றி பெறுவது யார் என்று பொதுமக்கள் அஞ்சும்படிப் போராட்டம் நடக்கிறது.

காவல் துறை ஓரக்கண்ணால் பார்க்கிறது. ஒதுங்கி இருந்து பார்க்கிறது, உதை விழுந்தாலும் பார்த்துக்கொண்டே நிற்கிறது.

சட்டம் ஒழுங்கெல்லாம் சாராய வீரர்களுக்குச் சலாம் போடுகிறது.

உபதேசம் செய்ய வேண்டிய உயர்ந்த சாதி ஏடுகளோ ஊமைகளாக இருக்கின்றன.

ஓடும் சாராயக் கங்கையில் ஓராண்டுச் சாதனையென்னும் ஓடத்தை ஓட்டி மகிழ்பவர்களுக்குக் காலம் எச்சரிக்கை காட்டத்தான் போகின்றது!

அதுவரை,

ஓராண்டுச் சாதனைகள் ஓலமிடட்டும்!

★★★★★★★-★★★★

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★★★★★★★★★★★

'மத' போதையில் கிறங்கும்

படித்த மேதைகள்!

தங்களைக் கடவுளின் மறு அவதாரங்கள் என்று ஏராளமான பணத்தை வாரி இறைத்து விளம்பரப் படுத்திக் கொண்டுவரும் ஏமாற்றுக் காரர்களான சாயிபாபாவுக்கும், மகேஷ் யோகிக்கும் அறியாமையில் உழலும் பாமரர்கள்தான் 'சீடர்'களாக இருக்கிறார்கள் என்று நினைத்தால். அது தவறுதும்!

மெத்தப் படித்தவர்களும் இந்த எத்தர்கள் விரிக்கும் வலையில் தெரிந்தோ, தெரியாமலோ விழுந்து விடுகிறார்கள்

"அவதாரம்" என்ற பெயரில் இந்தியாவுக்கு எதிராக உளவுவேலைபார்க்கும் 'அயோக்கிய சிகாமணியான' மகேஷ் யோகி அகில இந்திய வேத மாநாடு' ஒன்றை நடத்திய போது தன்னுடைய சீடர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் சில முக்கியமான 'பிரமுகர்' களின் பெயர்களை வெளியிட்டுள்ளார். அமெரிக்கா ஆய்வு நிலைய இயக்குநர் ஈ. சி. இ. சுதர்சன் சுகாதாரத் துறை அமைச்சகத்தின் டிப்டி டைரக்டர் ராமண்ணா, பெங்களூர் ஐ ஐ.டி. நிறுவன பேராசிரியர் கே.வி. ஜின்கா, சென்னை பல்கலைக்கழகப் பௌதீகத்துறைப்பேராசிரியர் பி. என். மாத்தீவ் ஆகியோரும் மகேஷ் யோகியின் மெத்தப்படித்தசீடர்களாம். படித்தவர்களே 'கண்ணிருந்தும் குருடாக' இருக்கும் போது இந்தியா ஒருசோசலிசப் பூங்காவாக மலருமா?

தென்னகன்

கண்ணெதிரே நடந்த கொலை வழக்குத் தண்ணீரில் கல்லாகக் கிடக்கும் போது எப்போதோ நடந்ததாகக் கூறப்படும் கொலை வழக்குகளை இழுத்துப் போட்டுப் பரிசோதனை செய்யும் முதல்வரை இந்நாட்டு மக்கள் விரும்பிப் பெற்றதே, இம்மக்கள் செய்த சாதனைதானே

இந்த அழகில்.

ஓராண்டாம்...! சாதனையாம்!

அண்ணாவின் பெயரைக் கூறிக்கொண்டே குதிரை' பந்தயத்தை அரசுடைமையாக்கிய 'அசகாய சூர சாதனை' ஒன்று போதுமே...

இதைவிட, ஓராண்டுச் சாதனை வேறு வேண்டுமா என்ன!

முதல்வர் நடிக்கும் முத்தமிழ்க் காவியம், காணத்தவறாதீர் கண்டு களிக்க வாருங்கள்; ஆறுவது வாரம் அனைவரும் வாருங்கள்' என்றெல்லாம் வெளி வரவிருக்கும் துண்டு வெளியீடுகளையும்; சொக்க வைக்கும் சுவரொட்டிகளையும் கண்டு மகிழும் வாய்ப்பு எந்த மாநில மக்களுக்காவது கிடைக்குமா!

இதைவிடச் சாதனை வேறு வேண்டுமா, என்ன!

ஒரு அமைச்சர் வில்லன், மறு அமைச்சர் தோழன்; முதலமைச்சர் கதாநாயகன் என்று கற்பனை செய்து பார்க்கும் பாக்கியமாவது எந்த மாநில மக்களுக்காவது கிடைக்குமா!

கடத்தப்படும்

கடவுள்கள்!

வள்ளி, தெய்வயானை. சுப்பிரமணியன், அனுமான், லட்சுமி நரசிம்மசாமி— ஆகிய 'ஐவரும்' அண்மையில் சிலரால் கடத்தப் பட்டார்கள்! இவர்களொன்றும் பிறப்பு, இறப்பு சுழலில் சிக்கும் சாதாரண மானிடப் பிறவிகள் அல்லர்! அவைகளையெல்லாம் கடந்த- மனித குலத்தையே 'உற்பத்தி' செய்யும் கடவுள்கள்!

இந்தக் கடவுள்கள் சிலகாலமாக 'எழுந்தருளியிருந்த' இடம் அரக்கோணம் அருகே இருக்கும் குருவராஜம்பேட்டை சுப்ரமணிய சாமி கோயில்!

இரவோடிரவாக இந்தக் கடவுள்கள் — அவர்கள் 'உற்பத்தி' செய்த சில மானிடர்களாலேயே கடத்தப்பட்ட போது 'காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்...' என 'அபயக்' குரல் கூட எழுப்பவில்லை!

காவலர் மிகுந்த சிரமப்பட்டு கடத்தல் காரர்களைப் பிடித்த போதும், அவர்களிடமிருந்து இரண்டு கடவுள்களைத்தான் மீட்க முடிந்தது. மற்ற மூன்று கடவுள்களின் கதி என்னவாயிற்று என்பது எந்தக் கடவுளுக்குத் தெரியுமோ!...

இந்தக் கடவுள்களின் இன்றைய சந்தை நிலவரம் ஐம்பதாயிரம் ரூபாய் எனச் சொல்லப்படுகிறது!

புருஷன்

தென்னரசு

(9)

ஒரு வாரம் கழிந்தது.

செந்தூரான் அதிகாலையில் வேப்பங்குச்சியால் பல்துலக்கிக்கொண்டு அணைக்கட்டுப் பக்கமாக வந்தான். எதிரே அவனது கூட்டாளிகள் அவனைச் சந்தித்தார்கள்.

"என்ன மேஸ்திரி அய்யா! கதை திரும்பிக்கிடுச்சே?"

'நேத்திக்கு சம்புலிப்புத்தூர் போனியாக்கும்? என்ன படம் ஓடுது?" செந்தூரான் கேட்டான்.

"நீங்க ஒண்ணு! நான் சினிமாப் படத்தையா சொன்னேன்! சக்குபாய் டீஸ்டால் கதையையில்ல சொல்றேன்! அதான் குருவம்மா! போனவாரம் ராத்திரியிலே பொன்னையா குடிசையிலே பாத்தேனே! பன்னெண்டு மணிவரை கிசுகிசுத்தாங்க! நாங்களும் 'ஆய் ஊய்'னு கனைச்சுப் பார்த்தோம். தேர் நகரணுமே குருவம்மா இப்படியின்னு நான் நினைக்கல்லே!' கூட்டாளியின் பேச்சில் ஜோடனைகள் மிகுந்திருந்தன.

"எனக்குந்தான் புரியல்லே! திடீர்னு பொன்னையா எப்படிக் கல்லாப்பெட்டிக்கு வந்தான்னு பார்த்தேன்!" செந்தூரான் ஆமோதித்தான்.

"குருவம்மாவை பிரமாதமா சொல்லிக்கிட்டிருந்தீங்களே! பாத்தீங்களா? காலை வாரிட்டா!" கூட்டாளி முடுக்கிவிட்டான்.

'அவ ஒரு பச்சைப்பாம்பு! அவளைப் புரிஞ்சுக்கவே முடியல்லையே! பொன்னையா போய்க்கோர்த்துட்டானே அவன் ஒரு காண்டா மிருகமாச்சே!" செந்தூரான் குமுறினான்

"அவன் எதுக்கும் துணிஞ்சவன்! ஜெயிலிலே வளர்ந்தவன் ஜாக்கிரதையாத்தான் பொழங்கணும்!"

"குரும்மா கெடக்கிறா; நம்மத்த சக்குதானே குறி!",

"பொன்னையா யாரைக் குறி வச்சிருக்கானோ? முதலிலே அதைத் தெரிஞ்சுக்க வேணுமே!"

"அவன் குருவம்மாவுக்குத்தான் வலைவீசியிருப்பான்! சக்கு அவனுக்கு மகள் வயது இருப்பாளே!" செந்தூரான் பெருமூச்சோடு சொன்னான்.

'நீங்க பொன்னையா மேலே குற்றம் சொல்லப்புடாது. திமுருக்காரி குருவம்மாதான் அவன் வீடுதேடி வந்தவள்!"

"பாவம் சின்ன வயதிலேயே புருஷனை விட்டு வந்தவள் அதாலே அவள் களிமதம் பிடிச்சு ஆடுறா போலிருக்கு! இருக்கட்டும் வெடிவக்கிறேன்"

'இது ஒண்ணும் பெரிய காரியமில்லே! ஒரே நாள் நான் செய்யட்டுமா? நீங்க மட்டும் தலையை அசைச்சா போதாதா?' கூட்டாளி திருகிவிட்டான்.

"என்ன ஏதாவது மந்தரம் வச்சிருக்கியா? சும்மாதான் சொல்லேன்." செந்தூரான் கேட்டான். கூட்டாளி செந்தூரான் காதுக்குள்ளே ஏதோ சொன்னான். அதைக் கேட்டு செந்தூரான் உவகை தாங்காமல் காடை கதறுவதுபோல் சிரித்தான்.

சக்குபாய் டீஸ்டால் வெற்றிகரமாக நடந்தது. பொன்னையா குளித்து நெற்றியில் நீறுபூசி அதன் நடுவே குங்குமம் வைத்து காளிகோயில் பூசாரியைப்போல் தினந்தோறும் கல்லாவில் உட்காருவான். அவன் இதயம் எப்படி இருந்தாலும் உலகத்திற்குப் பயங்கரவாதிபோல் தோன்றத்தான் வேண்டுமென்று நினைத்தானோ அல்லது சக்குபாய் டீஸ்டாலின் பாதுகாப்புக்கு அப்படிப்பட்ட தோற்றம்தான் தேவை என்று கருதினானோ தெரியவில்லை, பொன்னையா அவனது பழைய தோற்றத்தையே மாற்றிக்கொண்டான். அவனது கிருதா மீசையும், அதை அவன் அடிக்கடி முறுக்கிவிடும் தோரணையும் அவனை ஒரு போக்கிரி என்று தம்பட்டம் அடித்துக்கொண்டிருந்தன. முன்னைப்போல் வேலையில்லாதவர்களும் கடனுக்குச் சாப்பாடு கேட்கும் வாய்ச் சவடால்காரர்களும் இப்பொழுது டீக்கடையில் முகாம் போடுவதில்லை. அதனால் குருவம்மா உற்சாகமாகக் கடையைக் கவனித்தாள். பணம் சேர்க்க வேண்டுமென்ற ஆசை கூட அவளுக்கு வரத்தொடங்கிவிட்டது தினந்தோறும் அவளது உண்டியல் பெட்டியில் சக்குவின் திருமணத்திற்கென ஒரு ரூபாயைப் போட்டுக்கொண்டு வந்தாள். சக்குவின் திருமணத்திற்கு இப்போது என்ன அவசரம்? என்று யாராவது கேட்டால், 'சக்கு என்ன ஆம்பிளையா நம்ம விருப்பப்படி செய்யறதுக்கு? பெண்ணுக்கு எப்படி முடியுமோ அப்படி செஞ்சிடணும்' என்பாள் குருவம்மா!

கிணற்றுக்குப்போன சக்கு அழுதுகொண்டே வந்தாள்.

"ஏண்டி சக்கு. கண்ணைக் கசக்கிக்கிட்டு வர்றே?" சக்கு

ஊர் சிரிக்கிறது. தலை காட்ட முடியலே என்றாள் சக்கு

இருவருக்கும் வார்த்தைகள் நிலைகொள்ளவில்லை

"சக்கு அவரு கடையிலே இருக்கிறாருன்னுதானே ஊர் சிரிக்குது? சிரிக்கட்டும். சிரிக்கட்டும்னு தெரிஞ்சுதான் அவரை வலியப் போய்க்கூட்டியாந்தேன். நல்லாச் சிரிக்கட்டும் ஊரு. ஆனா உனக்கு ஒண்ணு சொல்லிவைக்கிறேன்; என்கையை உனக்குத்தொட்டிலாக்கி வளத்தேன். என் ரத்தத்தைப் பாலாக ஊட்டிக் காத்தேன். அதையெல்லாம் மறந்திட்டு ஊரிலே பேசறதை நம்பி இப்படி என்னைக் கேட்டுட்டே பாரு. அதை நான் மறக்கவே மாட்டேண்டி. இந்தக் குருவம்மா பதினைஞ்சு இருபது வருஷமா ஊசி மேலே தவமிருந்துக்கிட்டு வராள்னு ஊருக்குத் தெரிய வேணுண்டி. உச்சியிலே இருக்கிறானே அவனுக்குத் தெரிஞ்சாப்போதும்!" குருவம்மா தேம்பினாள்.

சக்கு மனம் இளகவில்லை. "இவ்வளவு பேசுறியே அப்புறம் எதுக்குப் பொன்னையாவைக் கூட்டியாந்து வைச்சியாம்!" சக்கு கேட்டாள்.

"அதுவா! போகப்போகத் தெரியும்! ஒன்னைப்புடிச்ச சனியனை விரட்டியடிக்கத்தான்! நான்தான் கெட்டுப் போனவ; வாழாம நாசமாப் போனவ, புருஷனோடு சேர்ந்து இருக்காதவ; குட்டிச்சுவத்திலே எருக்கு முளைச்சா என்ன ஊமத்தை முளைச்சா என்ன? நீயாவது வாழவேண்டாமா? அதுக்குத்தான் பொன்னையா! தெரிஞ்சுக்க!" குருவம்மா இரைந்தாள்.

'புரியச் சொல்லு! எனக்கும் அவருக்கும் என்ன இருக்கு?'—சக்கு விடவில்லை.

இப்போது சைக்கிள் சத்தம் கேட்டுத் திரும்பினாள் குருவம்மா. ஆண்டிபட்டிக்குப் போன பொன்னையா கடைக்கு வேண்டிய சாமான்களோடு வந்திறங்கினான்.

"என்ன சத்தம் போட்டுக்கிட்டு இருக்கீங்க ரெண்டு பேரும்? நானும் வந்ததிலே இருந்து பாக்கிறேன். கீரியும் பாம்பும் மாதிரி இருக்கலாமா? பாக்கிறவங்க சிரிக்க மாட்டாங்களா?' பொன்னையா அடக்கமாகக் கேட்டான். அதற்கு இருவரும் பதில் சொல்லவில்லை. ஆனால் சக்கு மட்டும் பொன்னையாவின் பேச்சை மதிக்கவில்லை என்பதை அவன் கடைக்கண்ணால் பார்த்துத் தெரிந்துகொண்டு விட்டான். சக்கு உதடுகளைப் பிதுக்கிக் கோணம் வழித்துக் காட்டியது அவனுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது பொன்னையாவின் உள்ளத்தில் அன்று விழுந்த கீறல் கடைசி வரை அழியவில்லை.

"ஏம்மா குருவம்மா!"

"என்ன!"

எதுக்காக நான் இங்கே இருக்கணும்? என்னாலே உங்களுக்குள்ளே சச்சரவு ஏம்மா?"

"என்ன சச்சரவு? அப்படி ஒண்ணுமேயில்லையே! நீங்க எதையும் மனசிலே வச்சுக்காதீங்க!"

"என்னவோ குருவம்மா எனக்கு சரியாப்படலே நான் ஆம்பிளை; எந்தக் கெட்ட பெயர் வந்தாலும் தாங்கிக்கிவேன்; ஆனால் நீ பொண்ணு சமாளிக்க முடியாது!"

—பொன்னையா மனம் நோகும் போதெல்லாம் குருவம்மாவுடன் இப்படிப் பேசுவதுண்டு! குருவம்மா எதையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் பூசி மறைத்துவிடுவாள் உள்ளுணர்வுதானே பெண்ணுக்கு அறிவு நூல்கள்! இல்லாவிட்டால் குடும்பத்தகராறை அடுத்தவரிடம் சொல்லுவதைவிட அந்தக் குடும்பத்தைச் செப்பனிட முயற்சிப்பதே சிறந்த வழி என்பதைக் குருவம்மா எந்தக் கல்லூரியில் போய்க்கற்றுக் கொண்டாள்?

அன்று அவளுக்கு எதிலும் நாட்டம் செல்லவில்லை. மனதில் பெருங்கலவரம் மூண்டிருந்தது.

"சே! இதுவும் ஒரு உலகமா?" என்று விரக்தியடைந்து பேசினாள். அந்தத் தகவல் அவளை அப்படிச் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. அவள் பொழுது சாய்ந்துவிட்டதும் கையில் விளக்கை எடுத்துக்கொண்டு அணைக்கட்டுப் பக்கமாக நடந்தாள். குருவம்மா எங்கே போகிறாள் என்பது சக்குவுக்குத் தெரியாது கடை வாசலில் நின்றுகொண்டே சக்கு நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள். குருவம்மாவின் விளக்கு மஞ்சள் நிற வண்டைப்போல் இங்குமங்கும் ஆடிக்கொண்டே நகர்வது சக்குவுக்கு நன்றாகத் தெரிந்தது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு விளக்கைக் காணவில்லை அது பள்ளத்தில் இறங்கிவிட்டது.

'சீ! இது ஒரு வாழ்க்கையா? மானங்கெட்ட பொழைப்பு! இத்தனை வயசாகியும் இந்த அம்மாவுக்குப் புத்தி வரல்லியே! நெருப்பில்லாமலா புகையுது!" சக்கு இசுக்கிக்கொண்டு கடைக்குள் போய்விட்டாள்.

குருவம்மா அணையை அடுத்துப் போய்விட்டாள். மின்மினிப் பூச்சியைப்போல் அவள் கையிலிருந்த விளக்கு சிமிட்டிக்கொண்டிருந்தது அவள் போக நினைத்த இடம் வந்துவிட்டது மையிருட்டு மயான அமைதி! குருவம்மா விளக்கைத் தோள்வரை தூக்கி அணைச்சுவரைப் பார்த்தாள். அவளுக்கு உடல் சில்லிட்டுவிட்டது அவள் கேள்விப்பட்டது உண்மைதான், கொட்டை கொட்டையாக அவளைப்பற்றி அவதூறாக எழுதப்பட்டிருந்ததை அவளே படித்துப்பார்த்தாள் —

"போக்கிரிப் பொன்னையா

(8 ம் பக்கம் பார்க்க)

மத்திய அமைச்சரின் இந்தி வெறி!

'இந்தித் திணிப்பு இருக்காது' என மத்திய அரசு எவ்வளவுக்கெவ்வளவு உரத்துக் குரல் எழுப்புகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இந்தித் திணிப்பு தீவிரமாக அமுலாக்கப்படும் என்பதை இந்தி பேசாத மக்கள் உணர்ந்துவிட்டனர்.

மத்திய நிதித்துறை இணை அமைச்சரான சதீஷ் அகர்வால் ஒரு உறுதிமொழி அளித்துள்ளார்: அதாவது அவருடைய அமைச்சகத்திலும், அதன் துணை அமைச்சகத்திலும் அதிகார பூர்வமான வேலைகள் அனைத்திற்கும் இந்தி மொழி பயன்படுத்தப்படுவதை ஊக்கப்படுத்தப்போகிறாராம். இந்த உறுதிமொழியை 'இந்தி சலோகார் சமிதி'க்கு அவர் அளித்துள்ளார். இந்த 'சமிதி'க்கு அமைச்சர்தான் துணைத்தலைவர்.

இத்தனைக்கும் பிறகு 'இந்தித் திணிப்பு இருக்காது!' என்று சொன்னால் அதை யாராவது நம்புவார்களா?

M.K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41. ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் ஏஜென்ட்கள் தேவை!

நடுத்தெரு நாராயணி

விடிந்தால் தீபாவளி இரவு முழுவதும் ஊரெங்கும் வாண வேடிக்கைகள். தெருவுக்குத் தெரு வீட்டுக்கு வீடு. போட்டி போட்டுக் கொண்டு வாணம் கொளுத்தி மகிழ்ந்தனர்- சந்தர்ப்பவாதிகளின் பச்சோந்தி உள்ளம் போல மத்தாப்புகள் பல நிறம் காட்டின.

ஒரு சில அரசியல் தலைவர்களின் போராட்ட அறிவிப்புகள் போல அவுட் வாணங்கள் ஆகாயத்தில் எழும்பின. ஆனுவுக்கு ஆனு – கானுவுக்குக் கானு என்ற விதத்திலே எழுதப்படும் அர்த்தமற்ற அடுக்குச் சொல் வசனம் போல சின வெடிகள் - ஊசிப் பட்டாசுகள் –தங்கள் திறமையைக் காட்டிக் கொண்டன. புதிய ஆடைகளைக் கண்டு பூரிப்புத் தவழ ஓடி ஆடினர் சிறுவர் சிறுமியர்.

தலைத் தீபாவளிக்கு வந்திருக்கும் தம்பதிகள் உபச்சாரங்களுக்கும்— கிண்டல் உபத்திரவங்களுக்கு மிடையே உல்லாசப் பொழுது போக்கினர். ஊரே மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கும் அந்த இரவில் நாராயணி மட்டும் சோகத்தின் நிழலாகத் தன் வீட்டில் அமர்ந்திருந்தாள்.

'தீபாவளி தமிழரின் திருநாளல்ல—தமிழன் இறந்த நாளைக் கொண்டாடும் ஆரியப் பண்டிகை; கருத்துக்கு ஒவ்வாத கதை அமைப்பு. அதை நமது பண்டிகையாகக் கொண்டாடிக் குதூகலிப்பது குருட்டுக் கொள்கை, ஆகவே அதில் கலந்து கொள்ளக்கூடாது' என்பதல்ல நாராயணியின் எண்ணம் அவள் அவ்வளவு அறிவு வளர்ச்சி பெற்றவளுமல்ல போட்டி போட்டுக் கொண்டு புராணக் குப்பையிலே மூழ்கி எழும் பெண்மணிகளின் வரிசையிலே அவளும் ஒருத்திதான் ஆயினும் அவள் தீபாவளி கொண்டாடவில்லை.

காதைத் தொடமுயலும் கண்களும். காண்பவரைக் கவரும் விதத்திலே அமைந்த உடற்கட்டும் பெற்ற நாராயணி தன் வீட்டு முகப்பிலே அமர்ந்து. தீபாவளி விழாவில் கலந்து மகிழும் ஊரைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

வீதியிலே கிருஷ்ணன்—சத்தியபாமா விக்ரகம் அலங்கரிக்கப்பட்ட அழகான ரதம் பவனி வந்து கொண்டிருந்தது. 'வீரன்' கிருஷ்ணன் நரகாசூரனிடம் தோற்று மயங்கும் வேளையிலே தனது கணைகள் கொண்டு அசுரனை அழித்தாள் பாமா என்பது தானே புராணம் சங்கு சக்ராயுதபாணியான விஷ்ணுவின் அம்சம் பரமாத்மாவே வீழ்ந்து விட்டபோது — அவரின் தேவி அசுர சிங்கத்தின் உயிரை அணைத்து விட்டாள் என்ருல் ஆச்சரியமாகத்தானிருக்கும் எக்கணை வீசினளோ; என்ன வக்கணை பேசினளோ... எப்படியோ தேவியின் தியாகத்தால் தேவர்களின் எதிரி ஒழிந்தான் என்று திருப்தி கொண்டனர் பக்தர்.

அந்த பக்தகோடிகள் பரந்தாமன் பெற்ற வெற்றியைக் கொண்டாடி, அவனையும் அவன் பிராட்டி பாமாவையும் ரதத்திலே வைத்துத் தெரு சுற்றினர் வெற்றியின் சூட்சமம் தெரியா விளையாட்டுப் பிள்ளைகளும், பரமாத்மாவுக்கு ஜே போட்டனர். ஊர்ப்பிரமுகர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். நாயன வித்வான்கள் தங்கள் திறமையைப் பொழிந்தனர். வீடெங்குமுள்ள பெண்டிரெல்லாம் ஆயர்பாடிகண்ணனுக்கு ஆரத்தி எடுத்து ஆனந்தப்பட்டனர்; ஆடினர்; பாடினர்.

ஆனல் நாராயணியோ ஆடவுமில்லை; பாடவுமில்லை; ஆரத்தி எடுக்கவுமில்லை நடக்கும் வைபவங்களைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள் பரமாத்மாவின் ஊர்வலம் அவள் வீட்டைத் தாண்டிப் போயிற்று அந்த வீட்டிலிருந்து யாராவது வந்து பகவானுக்குக் காணிக்கை செலுத்துவார்கள் என்று பக்தர்கள் எதிர் பார்த்தனர். யாரும் வரவில்லை.

ரதம் போகும் திக்கைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தாள் நாராயணி ரதத்திலே நரகாசூர வதமே சித்தரிக்கப்பட்டிருந்தது அந்தக்காட்சியை அவள் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மலையெனத் தோள் படைத்த நரகாசூரனின் மார்பிலே ஒரு வேல் பாய்ந்திருக்கிறது. குகையெனத் திறந்த வாயோடு நிற்கிறன் அவன். அவனெதிரே கிருஷ்ணன்— மயங்கிய நிலையில்! பாமா... வேல் பாய்ச்சும் சாயலில்! இதுவே ரதத்தில் சித்தரிக்கப்பட்டிருந்த தீபாவளிக் காட்சி. அறிவுக்கு அணை கட்டி, இன உணர்ச்சியைத் தடுக்கப் பெரும் சுவரும் எழுப்பி வைக்கும் அந்தப் பண்டிகையில் தம்மைமறந்து பங்கெடுத்துக் கொண்டு, பரவச முற்றனர் அந்த ஊரார்,

நாராயணியின் கண்களை விட்டு ரதம் மறைந்தது. வாணச் சத்தம் அவள் காதைத் துளைத்துக்கொண்டு தானிருந்தது ரதத்திலே அவள் கண்ட நரகாசூர வதக் காட்சி, அவள் நெஞ்சை விட்டகலவில்லை நினைவுகள் அலைமோதின,

நடுத் தெருவிலேதான் நாராயணியின் வீடு நடுத்தெருவிலே வீடுகட்ட நகர சபையார் எப்படி அனுமதித்தார்கள்; நகர சபையாருக்கு நாராயணியின் மீது அவ்வளவு அனுதாபம் விழக் காரணமென்ன என்றெல்லாம் யாரும் சந்தேகப்படத் தேவையில்லை அவள் வீடு இருந்த தெருவுக்குப் பெயரே நடுத்தெருதான்!

நாராயணி, நடுத்தெருவிலே, நடுத்தரமான குடும்பத்திலே. நாலுபேர் அண்ணன் தம்பிகளுக்கிடையிலே பிறந்தவள் ஐந்து மக்களையும் விட்டுவிட்டுப் பெற்ருேர் விடைபெற்றுக் கொண்டனர்! மாயூரம் காவேரியாற்றிலே துலா முழுக்கு ஆடவதற்காகச் சென்ற சகோதரர்கள் நால்வரும் திரும்பி வராமலே போய்விட்டனர். இளைய தம்பி ஆற்றுச் சுழலிலே சிக்கிக் கொள்ள, அதனை விடுவிக்க ஒருவர்பின் ஒருவராக மூவரும் குதித்து அனைவரும் நேரே "மோட்ச லோகம்" போய்விட்டனர் என்ற செய்தி மட்டுமே நாராயணிக்குக் கிடைத்தது.

இந்தச் சோகச் சுமை அவள் தலையிலே விழும் போது, அவள் பருவக் கொடி! சிற்பியின் கைத்திறனே உயிர் பெற்றது போன்ற சிந்தை கவர் உருவம்! புருவம்—பருவம் எல்லாமே, ஆண்களின் கருவமடக்கும் விதத்திலே அமைந்திருந்தன அழகுச் சிலை! அற்புதப் பதுமை! தேன் மலர்! திராட்சைக் கொடி! ஆனல் அந்த வாச ரோஜா, வேலியின்றி—பாதுகாக்க யாருமின்றி—தன்னந்தனியே வாடிக்கொண்டிருந்தது.

'தந்தை தாய் அண்ணன், தம்பி, ..எல்லோரையும் விழுங்கிவிட்டு இந்தப் பாவியைமட்டும் பாழும் உயிரை ஏன் வைத்திருக்கிருய்' என்று அவள் பகவான் சன்னிதானத்திலே பலமுறை அழுதிருக்கிருள்,

அப்படி அழுவதற்காக ஆலயத்திற்குச் செல்லும் போதுதான் குருக்கள் கிருஷ்ணய்யரின் சந்திப்பு ஏற்பட்டது கிருஷ்ணய்யர் கோயில் குருக்கள் என்ற போதிலும் மிடுக்கான நடையுடை பாவனைகள் உடைவர். கழுத்திலே அழகான தங்கச் சங்கிலி. அந்தச் சங்கிலியின் முனையிலே ருத்ராட்சக்காய் இடுப்பிலே மயில்கண் வேட்டி; மேலே ஒரு பெண்பட்டுத் துண்டு, பி ஏ. குடுமியுடன் கூடிய அமெரிக்கன் கிராப் —இவைதான் கோயில் குருக்கள் கிருஷ்ணய்யரின் அடையாளங்கள்! மறந்துவிட்டேனே—மன்னிக்கவும், அன்ருடம் சலவை செய்யப்படும் பூணூல் உண்டு. மார்பிலே வீபூதிபூச்சும் உண்டு விஷ்ணுவுக்கு விசேடமான நாட்களிலே நாமமும் போடுவார்; பட்டையாக அல்ல, பக்குவமாக—சிறிய கோடாக—சிங்காரம் கெடாமல்!

வயதோ முப்பதுக்கு மேல் இல்லை இந்த ஒரு முதல் போதாதா, காதல் வியாபாரத்தை ஆரம்பிக்க!

ஐம்பது அறுபது ஆனதுகளே நரைமயிர் கருக்கும் தைலம் தடவிக்கொண்டு பொய்ப் பல்லால் புன்னகை புரிந்து—நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று காதல் வாணிபம் நடாத்த கன்னியரைத் தேடி அலையும்போது முப்பதே வயதானகிருஷ்ணய்யர் மட்டும் சும்மா இருப்பாரா? அதுவும் புரு வலுவிலே பறந்து வருகிறது — வட்டமிட்டுப் போகிறதுஎன்ருல், கேட்கவும் வேண்டுமா? நாள் தோறும் நாராயணி, ஆண்டவன் சன்னதியிலே கண்ணீர்த் துளிகளைச் சிந்தினுள் கிருஷணய்யர் விபூதி பிரசாதம் அளித்து வந்தார். இந்த விஷயம் பல நாட்களாக மௌனமாகத்தான் நடந்து வந்தது. மாலை எப்போது வரும்; அப்போது அந்த மயிலும் வருமே என்று பாதை மீது பார்வையை விரிக்க ஆரம்பித்தார் கிருஷ்ணய்யர். நாராயணி கடவுளின் முன்னே தினம் தினம் அழவேண்டிய காரணமென்ன? குருக்களின் இதயத்தைக் குடைந்தது இந்தக் கேள்வி அவளையே கேட்டு விடத் தீர்மானித்தார்.

ஆனல் அவள் வரும் நேரத்திலேதான் அந்தப் பாழும் பக்தகோடிகளும் ஆலயத்திற்கு வருவது வழக்கமாக இருந்தது தனிமையில் அவளிடம் பேச அவருக்கு வாய்ப்பில்லாமலே போய்விட்டது.

ஒரு நாள்— சோமவாரம்— கோயிலிலே அபிஷேக ஆராதனைகள் அமர்க்களப்பட்டன. நல்ல கூட்டம். கச்சேரிகள் வேறு அந்த ஊர்ப் பெரிய மனிதர் ஒருவர் காங்கிரசிலே சேர்ந்து விட்டதற்காக நடத்தப்பட்ட திருவிழா அது. கோயிலுக்கு எதிரேயுள்ள காளி மண்டபத்தில் ஆடு வெட்டி பலி கொடுத்து கள்ளுக் குடங்களும் வைத்துப் படைத்து, காந்தியாரின் கொள்கைக்குப் பெருமை கொடுத்தார்கள்; அதை பொட்டி பெரிய கோயிலிலும் உயர்ந்த முறையில் உபயம் நடத்தினர்கள்.

அன்றைய தினம் வழக்கம் போல் நாராயணி வந்தாள். காத்திருந்த அய்யரும் பூத்திருந்த மல்லிகைவந்துவிட்டதென முகிழ்ந்தார் பரதம் நடக்குமிடத்திலும் பாட்டுக் கச்சேரி நடக்குமிடத்திலும் பக்தர்கள் தங்கள் கவனத்தைத் திருப்பியிருந்தார்கள்.

நாராயணியோ கர்ப்பக்கிரகத்திற்குள்ளே நுழைந்தாள். தாமரை மொட்டுப்போல் கரங்குவித்தாள்; காமனை வெல்லும் விழி மூடினுள். இமை அணையையும் பிளந்து கொண்டு கண்ணீர் வெள்ளம் புறப்பட்டு, கன்னத்தின் மேட்டிலே கிளைகளாகப் பிரிந்தது. ஆழ்ந்த பக்தியிலே மெய்மறந்து நின்ருள். "எனக்கு மட்டும் வழிகாட்டு அப்பனே! என்னை மட்டும் இந்த உலகத்திலே ஜீவித்திருக்க ஏன் விட்டாய்? பெரிய குடும்பத்திலே தனி மரமாய் நின்று தவிக்கின்றேன்; இது உனக்கு நியாயந்தானு?" என்று கதறினுள்.

பிரார்த்தனை முடிந்தது. பிரசாதம்தர அய்யர் வந்தார். விபூதியை வாங்கி நெற்றியிலே இட்டுக் கொண்டாள்; திரும்பினுள்.

காய்ந்து போன தொண்டையைக் கனைத்துக் கொண்டு அய்யர் ஏதோபேச வாயெடுத்தார். நாக்கு எழுவில்லை. கஷ்டப்பட்டுபேசியே விட்டார், நடுக்கத்தோடு! "ஏனம்மா. தினந்தோறும் இப்படிக் கண்ணிலே ஜலம் விடுறே?"

இதைக் கேட்டதும் நாராயணிக்குத் தூக்கி வாரிப் போட்டது. தானே ஒரு பருவமங்கை. வீட்டை விட்டு வெளியிலே கிளம்புவதே தவறு; கோயிலுக்கு வருகிறள் என்பதால் யாரும் குறைசொல்லமாட்டார்கள். ஆனல் அங்கே ஒரு ஆடவரோடு பேசுவது என்பது ஒத்துக் கொள்ளக் கூடிய விஷயமா? இவ்வளவையும் அவள்நினைத்து பார்த்து பதில் சொல்வதா இல்லையா என்ற தீர்மானத்திற்கு வர நேரமில்லை அவளும் ஒடுங்கியவாறே 'எல்லாம் என் விதி' என்று பதில் கூறினுள்.

"நாராயணி! நோக்கு என்ன கஷ்டம்னு நேக்கு நன்னு தெரியும். பெத்தவாள் பிறந்தவாள் எல்லாம் போயிட்டா! ஒண்டிக் கட்டையா இருந்து தவிச்சிண்டிருக்கே!" என்று பீடிகைபோட ஆரம்பித்தார் குருக்கள்.

நாராயணிக்கு அழுகை அதிகமாயிற்று "நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு, கர்ப்பகக் கிரகத்தைவிட்டு வெளியேறினுள் அவள்.

ஆண்டவன் தரிசனம்முடிந்ததும் கோயில் பிரகாரத்தைச் சுற்றிவிட்டுப்போவது நாராயணியின் வழக்கம். அவ்வாறே, அன்றும் அவள் பிரகாரத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தாள். பிரகாரத்திலே அப்பிரதட்சணமாகச் சுற்றி வந்துகொண்டிருந்த கிருஷ்ணய்யரை அவள் எதிரே கண்டாள். நாணத்தால் தலையைக் குனிந்தவாறு அவரைக் கடந்து செல்ல முயன்ருள்; கிருஷ்ணய்யர் சுற்றும் முற்றும் பார்த்தார். பிரகாரத்தின் பக்கம்யாருமே வரவில்லை. எல்லோருமே கச்சேரி மண்டபங்களில் நிறைந்திருந்தனர்.

"நாராயணி நில்" என்ருர் மெதுவாக! நாராயணிக்குக் கால் பெயரவில்லை, நின்று தீரவேண்டியிருந்தது. கிருஷ்ணய்யர் அவள் எதிரே ஓடினார். அவள் கால்களிலே தலை முட்டுமளவுக்கு சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு வீழ்ந்தார்.

நாராயிணிக்கு ஒன்றுமே புரியவில்லை "சுவாமி! சுவாமி!!" என்று கத்திவிட்டாள்.

"நாராயணி! அடியேனை ஏற்று ரட்சிப்பாய்; தேவி விக்கிரகத்தின் முன்னே கூட அடியேன் இப்படி நமஸ்கரித்தது கிடையாது. நீ தான் எனக்குத் தேவி! என்னை ஏற்றுக்கொள்!" என்று மன்ருடி நின்ருர்.

"சுவாமி! தாங்கள் தேவகுலம் — நானே..." என்று இழுத்தாள் அவள்.

"முற்றும் கடந்த பெரியவாளுக்கு எல்லா குலமும் ஒரே குலந்தான்! நான் ஆண் குலம் - நீ பெண்குலம் —வா இருவரும் காதல் குளத்திலே நீந்துவோம்"; என்றுகையைப் பிடித்தார் அய்யர்.

"அய்யோ சாமி! ஆண்டவன் கோயில் ..." என்றுஎச்சரித்தாள் நாராயணி.

"அருகில் ஒன்றும், தலையில் ஒன்றும் வைத்திருப்பவர்தானே ஆண்டவன்— இது தெரியாதோ நோக்கு!" என்று அவள் ஜடையைப் பிடித்து விளையாடினர் குருக்கள்

"அப்போ, இதெல்லாம் கூடாது — எனக்குப் பிடிக்காது" என்று சொல்லி விட்டு, தட்டிக் கழித்துவிட எண்ணி வாயைத் திறந்தவள் — ஏனே தெரியவில்லை; "யாராவது பார்த்து விடுவார்கள்" என்று நாணிக் கோணி நகர்ந்தாள்.

இந்த வார்த்தை போதாதா, அய்யருக்கு!

"எல்லாப் பசங்களும்பரத நாட்டியம் பார்த்துண்டு இருக்கான். ஒருத்தனும் வரமாட்டான். பயப்படாதே என்று சொல்லி அய்யர் அவளை எட்டிப் பிடித்தார். அவள்கன்னம் சிவந்தது. அவளது கையிலே தன்னை ஒப்படைத்தாள்.

திடீரென்று நாராயணிக்கு ஞானேதயம் ஆயிற்று! அய்ய[illegible]கப் பிடித்துக் கொண்டு "சுவாமி! என்னைக் காப்பாற்றுங்கள் நீங்கள்தான் எனக்குத்துணை!" என்று 'ஓ'வென அலறினுள்.

அய்யர் அவளை வாரியெடுத்துத் தாவிபணைத்துத் தைரியங் கூறி வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அவளும் ஆண்டவன் அருள்பாலித்துவிட்டான். என்ற நம்பிக்கையோடு வீட்டுக்குப் புறப்பட்டாள் அய்பரும் அந்தத் தையலின் கன்னத்தைச் சுவைத்த உதடுகளைக் கழுவாமலே ஆண்டவனுக்கு அர்ச்சனை மந்திரம் ஜெபிக்கக் கர்ப்பக் கிரகம் நோக்கி வரைந்தார்.

கோயில் பிரகாரத்திலே வாக்களித்த பிரகாரம். அய்யர் நாராயணியை எப்போதும் வைத்துக் காப்பாற்றுகிற அளவுக்கு அவள் வீட்டிற்கே வந்து சேர்ந்தார்.

கோயில் குருக்களுக்கு அடிச்சுதடா சான்ஸ்! கொய்யாப்பழமாக இருந்தாள்— அவளைக் கொய்துவிட்டார் அய்பர். என்ன இருந்தாலும் அனுபவிக்கப்பிறந்த ஜாதியப்பா அது! எத்தனையோ பேர் நத்திக்கிடந்தார்கள்; எல்லோரையும் எட்டி உதைத்துவிட்டுப் பூணூல் வலையிலே மாட்டிக்கொண்டது அந்தப் புள்ளிமான் போகிருன்போ! அவனுவது சுவைக்கட்டும்" இளங் காளையரிடத்திலே இப்படிப்பொருமை வடிவத்திதில் ஆரம்பமான பேச்சு விட்டுக் கொடுக்கும் தன்மையிலே முடிவு பெற்றது

கடவுளின் பக்கத்திலிருந்து கடமைகளைச் செய்கிற மனிதர் மிகவும் நல்லவராக இருப்பார், நம்பியவரைக் கைவிடமாட்டார்; அதிலும் பிராமணர் – புரண்டு பேச மாட்டார், பொய் கூறுவது பாபமெனக் கருதுவார்;பரமசிவன் பக்கத்திலே பார்வதி போலத் தன்னையும் அருகே வைத்து ரட்சிப்பார் என்ற நம்பிக்கையிலேதான் நாராயணி கோயில் குருக்களைத் தன் கணவனுக ஏற்றுக் கொள்ள முடிவுசெய்தாள். கோயில் பிரகாரத்திலே — கர்ப்பகிரகத்தின்நிழல் பட்டு இருண்டிருந்த இடத்திலேயே இதழ்களைப் பரிமாறிக் கொண்டு திரும்ப இல்லம் வந்த பிறகு அன்றிரவு முழுதும் தூங்காமல் அவள் யோசித்ததின் முடிவு குருக்களைத் தன் மணாளனுக ஆக்கிக்கொள்வது என்பதுதான்'

"ஏண்டி நாரா கவலைப்படுறே' நான் பிராமணன் நீ சூத்திரச்சின்னு தானே பார்க்கிறே! பிராமணுளுக்குத் தலைவர் இருக்காரே எங்க ராஜாஜீ – அவர் மகளைகாந்தி மகனுக்குக் கொடுக்கலியோ; ஜாதி ஆச்சாரம் பேசினுளே; என்ன ஆச்சு அது? அம்பேத்கார்னுஒரு பறையன்–ஆதித்திராவிடர்னுசொல்லிக்குவா — அவரைக் கல்யாணம் பண்ணிண்டு இருக்கிறது யார் தெரியுமா எங்க ஜாதிகாரி ஒருத்திதான்! ஜாதி ஆச்சாரம் எங்கேடி போச்சு? ருக்மணி அருண்டேல் சமாச்சாரம் தெரியுமோ நோக்கு! அடி அசடு— பித்துக்கோளி! சொல்றதைக் கேளு! பயப்படாதே! நான் உன்னைத்தான் கல்யாணம்பண்ணிக்கப் போறேன்" என்று கிருஷ்ணய்யர் பிரசங்கம் ஒன்றே செய்தார்

"ஜாதியாரெல்லாம் கல்யாணத்துக்குவருவார்களா?" என்று கேட்டு வைத்தாள் நாரயாணி

"வரவாண்டாமே — நான் ஜாதியாருக்குச் சொல்லப் போறதேஇல்லை நீஎன்னேடு சாபரட்சை கோயிலுக்கு வரவேண்டியது; இதோ வாங்கி வச்சிருக்கேன் மாங்கல்யம்? ஆண்டவனுக்கு நேரா இதை உன்கழுத்திலே கட்டுவேன் நமக்குமனுஷாள் சாட்சி வேண்டாம்! தேவாள் சாட்சி போதும்! என்ன சொல்றே?" என்று குழையோடு கேட்டார் குருக்கள்

மகேசன் சன்னிதானத்திலே தனக்குத் தாலி சுட்டப் போகிறர் குருக்கள் என்ற செய்தி கேட்டு நாராயணி குதூகலமடைந்தாள்! அவள் கழுத்திலே தாலி மின்னியது ஆனலும் ஊரிலே பேசிக்கொண்டார்கள் கிருஷ்ணய்யர் நாராயணியைவைப்பாக வைத்திருக்கிருர் என்று! அப்படிப் பேசியவர்களிடம் அவரும் 'ஆமாம்' போட்டார். இப்படி ஊரார் பேசுவது நாராயணி காதிலேயும் விழுந்தது. அவள் அவரிடம் முறையிட்டாள்.

"என்னை உங்கள் வைப்பு என்று சொல்கிருர்கள்" என்று!

"அட பித்து! 'வைப்பு' என்ருல் ஏன் கோபப்படனும் ஒய்ப்' என்ற இங்கிலீஷ் வார்த்தையைச் சொல்லத் தெரியாமே. அவா 'வைப்' என்று சொல்ரு அவ்வளவுதான்!" என்று ஒரு போடு போட்டார் கிருஷ்ணய்யர்!

கணவனே தெய்வமென்று கருதிக் கிடக்கும் நாராயணியும் அந்தப் பேச்சையெல்லாம் அதிகமாக வளர்க்காமல் அவரோடு சுமுகமாகவே பழகி வந்தாள்.

(அடுத்த இதழில் முடியும்)

கருணாநிதி



‘தினமணி’யும் புறநானூறும்!

புலவர் கோ. அண்ணாமலை எம். ஏ.

புறநானூற்றில் முதல்பாடலிலேயே தன் ஆரியப் பண்பாட்டின் அடிச்சுவடு தெரிகிறதாம் தினமணிக்கு! ஆனந்தப்படுகிறது!

பாரதம் பாடிய பெருந்தேவனார் — என்பது அந்தப் புலவர் பெயர்!

பாரதம் பாடியவர் என்றாலே விளங்கும்! இந்தப் பெருந்தேவனாருக்குக் கடவுள் வாழ்த்துப் பாடுவது தான் தொழில்!

புறநானூறு,
நற்றிணை,
குறுந்தொகை,
ஐங்குறுநூறு,

அகநானூறு ஆகிய அனைத்துத் தொகை நூல்களுக்கும், கடவுள்வாழ்த்துப்பாடி அதனை நூலுக்கு முன்னே சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தவர்!

ஆக, நூலுக்குள்ளே இருக்கிற கருத்துக்கும் காலத்துக்கும், மிகமிகப் பின்னாலே வசதிப்படி எழுதிச்சேர்க்கப்பட்ட கடவுள் வாழ்த்துதான் புறநானூற்றில் — பிறதொகை நூல்களில் காணப்படுகிறது என்பதை அறிஞர் எண்ணிப் பார்த்திடக் கடமைப்பட்டிருக்கின்றனர்!

அடுத்து, புறநானூற்றின் முதல் பாடலைப் பாடியவர் முரஞ்சியூர் முடிநாகனார் என்பவர் அவர் பெயரை முடிநாகராயர் என்றுவசதிப்படிஎடுத்து எழுதிக்கொண்டு நாகராயர் என்கிற பெயரே வடமொழி என்று வாதிடுகிறது தினமணி.

“நாகனார் என்பது பிற்காலத்து ஏடெழுதினோரால் நாகரார்யர் எனப் பிறழ எழுதப்பட்டுவிட்டது”

— என்று ஔவை சு துரைசாமி அவர்கள் தமது தெளிவுரையில் குறித்திருப்பதை தினமணி, தன் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டு படித்தறியவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம.

வேலிபிட்டு வாழாததாலும்.
வேறு இனமென்று யாரையும்
வெறுத்து ஒதுக்காததாலும்
விரிந்த மனம
உடையவராயிருப்பதாலும்
பெருந்தன்மை
உடைமையாலும்

தமிழினத்தைப பற்றி என்ன வேண்டுமானாலும் எழுதலாம், என்று தினமணி கருதுவதாகத் தோன்றுகிறது அதனால் தமிழுக்கு எல்லாமே வடமொழியிலிருந்துதான் வந்தது என்கிற எடுபடாத — பழைய — உளுத்துப்போன வார்த்தை எழுப்ப எண்ணுகிறது

ஆரிய இனத்திலிருந்து தமிழினம எத்துணை வேறுபட்டது என்பதனையும்,

வடமொழிக் கலப்புப்பற்றியும், பல்லாண்டுகளுக்கு முன்பே, நாமல்ல; வி கோ. சூரியநாராயண சாஸ்திரியார். பரிதிமாற்கலைஞர் -எழுதியதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறோம:

“இவ்வாரியர் இந்தியாவிற் புகுமுன்னரே, தென்மேற்றிசையிலுள்ள அரபிக்கடல் வழியாகத் தமிழர்கள் வாணிகஞ் செய்யத் தொடங்கினர்கள். மயிலினைக் குறிக்கும் ‘தோகை’ என்னும் செந்தமிழ்ச்சொல் எபிரேயபாஷையில் ‘துகி’ என வழங்குதலுங் காண்க. வடமேற்றிசை வாணிகராகிய பினிஷியர்கள் பல மயில்களைத் தம் அரசன் சாலமோனுக்காகக் கொண்டு சென்றுழி இத்தமிழ்ச்சொல்லையும் கொண்டு சென்றனர். எகிப்தியரும் தென்னிந்தியாவில் உள்ள தமிழர்களுடன் கி. மு. 500-க்கு முன்னரே வாணிகம் செய்துவந்தனர்...”

— இவை வாணிகம்பற்றிக் கூறியவை. இனி வடமொழிக் கலப்புப் பற்றி அதே சூரிய நாராயண சாஸ்திரியார் — மாற்கலைஞர் கூறுகிறார்,

“வடமொழி தமிழ்நாட்டில் வெகுநாள் காறும் இயங்கியும், அதற்குத் தமிழ்மொழியைத் தன் வழியிலே திருப்பிக் கொள்ளுதற்குற்ற ஆற்றலில்லாது போயிற்று

வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை யுணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்மநூற் பயிற்சிமிக்குடையராயும், கலையுணர்ச்சிசான்றவராயும் இருந்தமை பற்றித் தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர் தமிழர்களிடத்தில்லாதிருந்த அந்தணர், அரசர் வணிகர், வேளாளர் என்ற நால் வகைச் சாதிமுறையை மெல்ல மெல்ல நாட்டிவிட்டனர்!”

“முற்படைப் பதனில் வேறாகிய முறைமைபோல் நால்வகைச் சாதி இந்நாட்டில்நீர் நாட்டினிர்”

— என்று முழங்கும் கபிலர் அகவலையும் காண்க. இன்னும் அவர்தம் புந்திநலங் காட்டித் தமிழரசர்களிடம் அமைச்சர்கள் எனவும் மேலதிகாரப் பிரபுக்கள் எனவும் அமைந்து கொண்டனர்; தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியும் முன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும் வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தனபோலவும் காட்டினர்”

காய்தல் உவத்தல் அகற்றி ஆய்வு செய்து வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் வெளியிட்டுள்ள இந்த உண்மைகளை தினமணி எண்ணிப்பார்க்க வேண்டும்! வி கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் பெரியாரின் சீடருமல்லர்; பேரறிஞர் அண்ணாவின் தம்பியுமல்லர்! ‘அவர்களிலேயே ஒருவர்!

சாஸ்திரியார் மட்டுமில்லை! பி. டி. சீனிவாச ஐயங்காரும் இத்தகைய உண்மைகளை விளக்கியிருக்கிறார்! 1923-இல் பதிப்பிக்கப்பட்டுள்ள ‘இந்திய சரித்திரம்’ முதல் பாகத்தில் அவர் குறிப்பிடுகிறார்.

“ஆரியம் பரவுவதற்குமுன் இந்தியாவில் நான்கு வருண பேதங்கள் இல்லை! மணவிஷயத்தில் ஆரியர்களின் யக்ஞ முறை அனுஷ்டிக்கப்படவில்லை வடஇந்தியாவில் பேசப்பட்ட பாஷைகள் கொஞ்சம்கொஞ்சமாக சமஸ்கிருதத்தில் கடன் வாங்கியதானாலும், தென் இந்தியா சமஸ்கிருதத்துக்கு அடிமைப்படவில்லை. இந்தியாவில் ஆரம்ப காலத்தில் பேசிவந்த பாஷையின் நாகரிக உருவந்தான் தமிழ்!”

கி. மு 5000-க்கு முந்திய இந்தியாவின் நிலைமை பி. டி சீனிவாச ஐயங்கார் இவ்வாறு விளக்கியிருக்கிறார்.

இதனைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தாம் எழுதிய ‘ஆரிய மாயை’ என்னும் நூலில் எடுத்துக் காட்டியதை தினமணி மறந்திருக்கும்; நாம் நினைவில் வைத்திருக்கிறோம்.

“மணவிஷயத்தில் ஆரியர்களின் யக்ஞ முறை அனுஷ்டிக்கப்படவில்லை” என்று பி. டி. சீனிவாச ஐயங்கார் எழுதியது எவ்வளவு உண்மை என்பதனைக் கீழ்வரும் தொல்காப்பிய நூற்பா உறுதிசெய்கிறது, திருமணத்தின்போது சடங்குகளும் யக்ஞ முறைகளும் எப்போது தோன்றின என்கிற கேள்விக்கு ஐயங்கார் ஆரியர் வரவுக்குப் பின்னர் என்று பதில் தருகிறார். தொல்காப்பியரும் ஏறக்குறைய அதே பதிலைத்தருவதிலிருந்து ஐயங்கார் கூற்று எத்துணை உண்மையானது என்பது விளங்கும், தொல்காப்பியர் என்ன கூறுகிறார்?

“பொய்யும் வழுவும்
தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர்
கரணம் என்ப”

— என்பது தொல்காப்பியர் கூற்று!

“பொய்யும் குற்றமும் எப்போது தோன்றினவோ, அப்போதுதான் மேலோர் திருமணத்தினையும் சடங்குகளையும் வகுத்தார்கள்”

— என்பது தொல்காப்பியர் கருத்து.

ஆரியர் வந்த பிறகு என்கிறார் ஐயங்கார். பொய்யும் குற்றமும் வந்த பிறகு என்கிறார் தொல்காப்பியர். சொற்கள் வேறானவை; கருத்து ஒன்றே!

ஆக தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே ஆரியருடைய ‘திறமையான காரியங்கள்’ இங்கே முளைக்க ஆரம்பித்திருக்கின்றன என்பதை அறிகிறோம்.

‘ஆரியப் பண்பாடும், வடமொழியிலிருந்து சில சொற்களும் தமிழ்ப்பண்பாட்டிலும் தமிழிலும் கலந்துவிட்டன’ என்பதை நிலைநிறுத்தவேண்டுமென்பது தினமணியின் ஆசையாக இருந்தால், அதுகூடப் பெரிய தவறில்லை!

ஆனால் ஆரியப்பண்பும் — வடசொற்களும் கலந்துவிட்டமையால் தமிழ்ப்பண்பே அடையாளந் தெரியாமல் சிதைந்துவிட்டது என்றோ — தமிழ்மொழி தனித்தியங்க வல்லமைபெற்றதில்லையென்றோ எண்ணினாலும் — இப்படியெல்லாம் எழுதுதன் மூலம் தமிழின எழுச்சியை முடக்கிவிடலாம் என்றோ எண்ணினாலும் அதுதான் மிகப்பெரிய தவறாகும்!

கலந்த பண்பாடு எது ஏற்கனவே இங்கே இருந்த பண்பாடு எது என்பதற்கு அசைக்க முடியாத — அழிக்க முடியாத ஆதாரங்கள் — புறநானூற்றிலும் சரி, பிற சங்க இலக்கியங்களிலும் சரி — எண்ணற்றவை இருக்கின்றன அவற்றில் ஒன்றிரண்டை மட்டுமே ஈண்டு எழுதினோம். அனைத்தையும் தினமணியும் அதன் கட்டுரையாளரும் அறிய விரும்பினால் மீண்டும் எழுதுவோம்!

புருஷன்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மீது குருவம்மாவின் மோக ஞஸ்திரம்! சக்குபாய் டீஸ்டால் சல்லாபக் கூடமாக மாறியது ஏன்? குருவம்மாவின் வண்டவாளம அம்பல மேறும் நாள் வந்துவிட்டது”

— இதைப் படித்ததும் குருவம்மாவின் மனம் குமுறியது. குமுறி, கொப்பளித்து. வெடித்து என்ன பயனைக் காணப்போகிறாள்! ஒருபெண் தனியாக இருந்தால். அதுவும் அவள் அழகியாக இருந்தால் அவதூறுகள், கடல்களையும், மலைகளையும், பாலைவனங்களையும் தாண்டிக்கூடப் பாய்ந்து வந்து அவளைக் கொத்தாதா?

குருவம்மாவின் நடையில் போகும்போது இருந்தவேகம் திரும்பும்போது இல்லை. புயலில் சிக்கிய படகைப்போல் தடுமாறித்தடுமாறிக்கடைக்கு வந்து சேர்ந்தாள். குருவம்மா திரும்பியதற்கும் பொன்னையா கடை வீதிப் பக்கமிருந்துவந்ததற்கும் பொருத்தமாக இருந்தது

“இவ்வளவு நேரத்துக்கப்புறம் எங்கேம்மா போய்ட்டு வர்றே?” பொன்னையா கேட்டான்.

பழைய பாக்கிகளைக் (க)டுக்கிட்டு வர்றேன்” குருவம்மா பதில் சொன்னாள்.

இதைக்கேட்டு உள்ளே இருந்த சக்கு “என்ன பசப்பு? என்ன பாசாங்கு? பூனை, கண்ணை மூடிக்கிட்டுப் பாலைக் குடிச்சா உலகமே இருண்டா போயிடும்! ரெண்டு பேரும் எங்கேயோ போய் கும்மாளம் போட்டுட்டு வந்து நடிக்கிறதைப் பாரு” என்று ஜாடை பேசினாள்.

“என்னடி சக்கு பேச்சுக் குரல் கேக்குது? யாரோட பேசறே?” — குருவம்மா கேட்டாள்.

“எனக்குக் கிறுக்குப் புடிச்சுப் போச்சு; அதனாலே புலம்பிக்கிட்டிருக்கேன்” சக்கு இடித்தாற்போல் பேசினாள்.

“சரி, சனியன் புடிச்சிருச்சு! அது ஒனக்கா எனக்காங்கிறதுதான் புரியல்லே!” என்று முனங்கிக் கொண்டே தலையைச் சாய்த்தாள் குருவம்மா. பொன்னையா வாசலில் கட்டிலைப் போட்டுப் படுத்தான்.

(தொடரும்)

‘நம்நாடு’ விற்பனையாளர்

சென்னை — விருகம்பாக்கம் நம்நாடு விற்பனையாளராக கீழ்க்கண்ட தோழர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சீனுவாசன்
40 பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை
சென்னை-14

முதலமைச்சர் வழங்கும் 'டானிக்'

புனிதரின் இராம இராச்சியம் ஓராண்டைக் கடந்து விட்டது. இந்த ஓராண்டில் மக்களுக்குத் துன்பம் இல்லை. துயரம் இல்லை. எதிர்க்கட்சிகள் இகழும் வண்ணம் ஆட்சியுமில்லை எந்த பொய் வழக்கும் எதிர்க்கட்சிகளின் மீது போடப்படவில்லை அதில் அவர் கவனமும் இல்லை மக்கள் சிந்தனை தவிர வேறு சிந்தனையில்லை என்றெல்லாம் சொல்ல எதுவும் இல்லை என்றாலும்

கோமாளித்தனமான எண்ணங்கள் உண்டு குதர்க்கமான செயல்கள் உண்டு சட்ட விரோதமான நடவடிக்கைகள் சர்வ சரதாரணமாக ஆனதுண்டு. குழப்பத்தை நாட்டில் நிலைநிறுத்திய பெருமையுண்டு என்றெல்லாம் சொல்லுவதற்கு நிறைய உண்டு

திரைப் படங்களில் பல காலங்கள் நடித்து வந்ததினால் உலகம் என்பதும் திரைக்கதை போன்றதுதான் என எண்ணிச் செயல்படுகின்றார் எம். ஜி. ஆர். செய்வதெல்லாம் புரட்சி என்றும்; தான் ஒரு பெரிய தத்துவமேதை என்றும், மக்கள் அனைவரும் தன் பக்கமே என்றும். நிலைமை மோசமானால் காவலர்களை வைத்து எதையும் சமாளித்து விடலாம் என்றும் போலீஸ் வழக்கு என்றால் அனைவருமே அடங்கி ஒடுங்கி விடுவார்கள் என்றெல்லாம் வீணான கோட்டைகளைக் கட்டிக் கொண்டு. கோட்டையைக் குட்டிச்சுவராக ஆக்கிக் கொண்டிருக்கிறார்

இந்த ஓராண்டுக்குள் அவருடைய அலங்கோல ஆட்சியிலிருந்து நாம் அறிந்து கொண்ட குணநலன்கள் இவை காவலர்களிடம் அவருக்கு ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை, ஏன் பயம் என்று கூடச் சொல்லலாம். கிட்டத்தட்ட ஒரு போலீஸ் இராச்சியத்தையே அவர் நடத்திக் கொண்டிருக்கிறார். "தொழிலாளர் பிரச்னையில் போலீசை வைத்துத் துன்புறுத்தும் நிலை இந்த ஆட்சியில் வராது" என (மக்கள் குரல் 1—7—77) போலியான கொள்கை அறிவிப்புக் கொடுத்த இப் புண்ணியரின் ஆட்சியில் போராட்டம் என்றாலே போலீசை வைத்துப் பயமுறுத்துவது என்பது வாடிக்கை ஆகிவிட்டது. போராட்டம் ஏன் வந்தது? அடிப்படை என்ன? அதை எப்படிக் களையலாம் என்றெல்லாம் யோசிப்பதே இல்லை

பெருந்துத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் போது அனைவரையும் கைது செய்து வெளியூரில் அடைத்து வைத்தார். பாடி தொழிலாளர் பிரச்சினையில் காவலர்களை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தினார். சட்டக் கல்லூரி மாணவர்கள் தங்கள் கோரிக்கையை முன்வைத்த போது பல்வேறு விதிகளின் படி வழக்குத் தொடுத்தார். பலரைக் காவலில் வைத்தார். ஜாமீனில் அவர்களை விடவும் மறுத்தார். கல்லூரி ஆசிரியர்களை. கர்ப்பிணி என்றுகூடப் பாராமல் கைது செய்து தொலைதூரங்களுக்குக் கொண்டு சென்று அடைத்தார். என். ஜி. ஓ-க்களை ஈவிரக்கமின்றி சிறையில் அடைத்தார். காலிகளைவிட்டு அடித்தார். விவசாயிகளைக் கொடூரமாகத் தாக்கி, பலரின் உயிரைத் துப்பாக்கிச் சூட்டின்மூலம் பறித்தார். இவைகள் போதாது என்று இராணுவத்தையும் துணைக்கழைத்தவர் இந்த உத்தமர். தமிழ் நாட்டுத் தெருக்களில் இராணுவ அணிவகுப்பை நடத்தி மக்களை கிலி கொள்ளச் செய்த பெருமையும் இவருக்கு உண்டு

இவரின் இந்த ஓராண்டுக் கால ஆட்சியிலே சுமார் 52-க்கும் மேற்பட்ட முறைகள் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பல இடங்களில் வெடிக்கப்பட்டுள்ளன. ஐந்துமுறை துப்பாக்கிச்சூடு நடைபெற்றிருக்கின்றது. சினிமா அரங்கில் ஏற்பட்ட தகராறு காரணமாகக்கூட துப்பாக்கி சூடு நடந்திருக்கிறது. இவர் சினிமாவை விடமாட்டேன் என்பதுபோல் அதுவும் இவரை விடாது போலும்

கண்ணீர்ப்புகை திலகத்தின் இந்த ஆட்சியிலே இவை திரைப்படங்கள் போலவே நடந்துள்ளன

★★★★★★!★★★★!★★★

—:வீரசோழன்:—

★★★★★★!★★★★!★★★

சினிமா உலகத்திலிருந்த போது ஒரு படத்தை இரண்டு வாரம். மூன்று வாரம் தொடர்ச்சியாக நடத்தியிருப்பது போல கண்ணீர்ப் புகைக் குண்டு பிரயோகத்தையும் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் மூன்று நான்கு நாட்கள் நடத்திய சாதனையும் உண்டு இது என்ன சாதனை? துப்பாக்கித் துண்டுப்பிரயோகத்தையே தொடர்ச்சியாக மூன்று நாட்கள் இடைவிடாமல் நடத்திக் காட்டியிருக்கிறார் இவர். எமது இடைவிடாத மூன்றும் நாள் சாதனை என்று இந்த வேதனையை இவர் சொல்லிக் கொள்ளலாம்.

அப்படியாவது போலீசாரை திறமையாக இவர் பயன்படுத்தியிருப்பாரா என்றால் அதுவும் இல்லை. சென்னையின் ஒரு பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட சட்ட விரோதமான சாராய விற்பனைப் போட்டியினால், அப்பகுதியே இந்திய சர்க்காரின் அரசியல் நிர்ணய சட்டக் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு பிரதேசம் போல் சந்தி சிரித்ததை நாம் மறக்க இயலுமா! நான்கு நாட்கள் தலைநகரில் ஒருபகுதியில் மட்டும் நிகழ்ந்த இந் நிகழ்ச்சியை அடக்கிட இயலாதவர்களாக நம் தமிழகக் காவலர்கள்? அல்லவே அல்ல அவர்களை கேவலமாக ஆக்கிய பெருமை இவரையே சாரும்.

செயல்பட வேண்டிய இடங்களில் செயலற்றும் செயல்பட வேண்டாத இடங்களில் செயல்பட்டும் காவலர் எனும் பதத்திற்குப் பொருள் இல்லாமல் ஆக்கிய புண்ணிய மூர்த்தி இவராவார் பயங்கரத்துக்கு உரியவர்கள் காவலர் என்பது இவரின் ஆழமான சித்தாந்தம். உங்கள் நண்பனை, பயங்கர வாதிகளாக ஆக்கிவிட்டார். ஆனால் இவை எல்லாம் வேண்டாதவர்களுக்குத்தான் அவருடைய கட்சிக் காரர்களைப்பொறுத்தவரை இவர்கள் பயங்கரத்துக்கு உரியவர்கள் அல்ல, பரிதாபத்துக்கு உரியவர்கள்.

திரைக்கதை நாயகன், நாயகியை எதிரியின் பாசறையிலிருந்து மீட்டு வருவது போல, ஆளும் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் போலீஸ் காவலில் இருந்த கைதியைக் காவலர் நிலையம் சென்று தாக்கி தன்னிச்சையாக விடுவித்து வந்த நிகழ்ச்சியும் (கிணத்துக் கடவு நிகழ்ச்சி) கள்ளச்சாராய வேட்டைக்குப் போன சப்—இன்ஸ்பெக்டரை ஆளும்கட்சி அமைப்பாளரும் மற்றவர்களும் கம்பத்தில்கட்டிவைத்து கத்தியால் குத்திய நிகழ்ச்சியும் (தேனும்பேட்டை நிகழ்ச்சி) ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் தோற்ற ஆளும் கட்சி வேட்பாளர் காவல் நிலைய இன்ஸ்பெக்டரை எட்டி உதைத்த நிகழ்ச்சியும் (பல்லாவரம் நிகழ்ச்சி) ஏராளம் ஏராளம்!

ஆனால் நமது ஐ ஜி சொல் சொல்கிறார் "போலீஸ் தலையிடாத அரசு இது ஒன்று தான்" என்று! என்ன சிரிக்கிறீர்கள்சிரியுங்கள் விலாஎலும்பு உடைய சிரியுங்கள். அது ஒரு சிறந்த டானிக் நம்முதலமைச்சரின் ஆட்சியினால் டானிக் செலவாவது மிச்சமாகிறதே! அது ஒரு நன்மைதான்!

படிப்பது மார்க்ஸீயம்

மண்டியிடுவது-மகேஷ்யோகியிடம்!

உச்ச நீதி மன்றத்து நீதிபதி வி. ஆர். கிருஷ்ண (அய்யர்) மகேஷ் யோகியின் சீடர்களில் ஒருவராம். மார்க்ஸியத்தின் 'ஆழம்' கண்டவர் என இந்தியக் கம்யூனிஸ்டுகளால் 'துதி' பாடப்படும் வி ஆர். கிருஷ்ண (அய்யர்) மகேஷ்யோகியின் சீடராகவும் இருப்பது வியப்பாக இல்லை! 'மதம் மக்களுக்கு அபினி போன்றது' என்ற மார்க்ஸின் உயிர்நாடிக்கொள்கையைப் படித்திருந்துமா கிருஷ்ண (அய்யர்) ஊரை ஏமாற்றும் போலிப் பேர்வழியான மகேஷ்யோகியின் சீடர் ஆனர்?

சட்டமென்ற வலையைக் கிழிக்கும்

பெரிய மீன்கள்!

மோசடிக்காரர்களில் உலகப் புகழ்பெற்றவரான தர்மதேஜா மீண்டும் இந்தியாவிலிருந்து தப்பி ஓடிவிட்டார் என்ற 'பரபர'ப்பான செய்தியை அனைத்துப் பத்திரிகைகளும் வெளியிட்டன.

வரி ஏய்ப்பு, அந்நியச் செலாவணி மோசடி, கப்பல் கம்பெனி நடத்துவதாகப் பொய் சொல்லி பல கோடி ரூபாய்களை இந்திய அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கியது, போன்ற பல குற்றங்கள் புரிந்த தேஜா இந்திய அரசாங்கத்திடம் சிக்காமல் பல ஆண்டுகள் அயல்நாடுகளிலேயே 'ஒளிந்து ஒளிந்து' வாழ்ந்து கொண்டிருந்தார். அவரை இந்தியாவிற்குப் பிடித்துக்கொண்டுவர மத்தியப் புலனாய்வுத் துறையினர் படாதபாடுபட்டனர்.

மிகுந்த சிரமத்திற்கிடையே கொண்டுவரப்பட்ட தேஜா இந்திய அரசாங்கத்தின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு எப்படி 'டிமிக்கி' கொடுத்தார் என்பது மர்மமாகவே உள்ளது.

'வரிபாக்கி எதுவுமில்லை' என்று வருமான வரித் துறையினர் சான்றிதழ்அளித்தால் தான், ஒருவர் அயல்நாடு செல்ல அனுமதிக்கப்படுவார். நான்கு கோடி ரூபாய்க்கு மேல் வருமான வரி கட்டவேண்டிய தேஜாவுக்கு வருமான வரித்துறையினர் எப்படித்தான் சான்றிதழ் வழங்கினர்களோ?

1967-ஆம் ஆண்டே தேஜாவின் 'பாஸ்போர்ட்' ரத்து செய்யப்பட்டுவிட்டது ஆனால் இப்போது புதிய 'பாஸ்போர்ட்'டை அவர் எப்படியோ பெற்று 'கம்பி' நீட்டிவிட்டார்!

யாராவது ஒரு மத்திய அமைச்சர்-வெளிவிவகாரத்துறை அமைச்சரகத்தைச் சேர்ந்த முக்கிய 'புள்ளிகள்' ஆகியோரின் ஒத்துழைப்பு இல்லாமல் தேஜா இந்தியாவிலிருந்து வெளியேறியிருக்க முடியாது என டில்லி வட்டாரத்தில் பரவலாகப் பேசப்படுகிறது.

'சட்டம் என்ற வலையைக் கிழித்தெறிந்துவிட்டுப் பெரிய மீன்கள் தப்பித்துக் கொள்கின்றன; சிறிய மீன்கள்தான் மாட்டிக்கொள்கின்றன'—என்ற கூற்று தேஜா விவகாரத்தில் உண்மையாகிவிட்டது!

அஞ்சாநெஞ்சன்...]

[3 ம் பக்கத் தொடர்ச்சி

விடுவதில்லை அரசாங்க அதிகாரிகளில் சிலர் போர்ப் பிரசாரம் புரிவதாகக் கூறிக்கொண்டு 'புராணப் பிரசங்கங்கள்' செய்து வந்தனர். ஆனால் நம் அழகிரியோ, நேருக்கு நேராக, அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு மறுப்புரைத்து புராணப் புளுகுகளைக் கண்டித்து உரையாற்றுவார்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சி. போர்ப் பிரசாரக்கூட்டம் ஒன்று திண்டுக்கல்லில் நடைபெற்றது. அப்போது மதுரை மாவட்ட உதவி நீதிபதியாக இருந்த திரு ஏ. எஸ் பி. ஐயர் ஐ. சி. எஸ். (பின்னர் சென்னை உயர் நீதி மன்ற நீதிபதியானவர்) தலைமை வகித்துப் பேசுகையில், அணிலும் குரங்கும் இராமருக்கு உதவி செய்ததைப்போல மக்கள் போருக்கு உதவவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்

அடுத்துப் பேசிய அழகிரி; ஐயரின் புராணப் பிரசாரத்தை அழகாக, நையாண்டி செய்து காரசாரமாகக் கண்டித்தார். நீதிபதி ஐயருக்கு ஆத்திரம் ஏற்பட்டாலும் வெளியே காட்டிக்கொள்ள முடியவில்லை

ஒரு முறை மதுரை கலெக்டர் திருவில்லிபுத்தூரில் போர்ப் பிரசாரக் கூட்டத்தை ஏற்பாடு செய்துவிட்டு சில மணி நேரத்துக்கு முன், பசுமலையில் அப்போது வசித்து வந்த அழகிரியிடம் சென்று, கூட்டத்துக்கு வருமாறு அழைத்தார். முன்னறிவிப்பு இல்லாமல் திடீரென அழைக்கப்படுவதால் தாம் வர முடியாது என்று அழகிரி மறுத்து விட்டார் கலெக்டர் எவ்வளவோ மன்றாடியும் அழகிரி தமது முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. அழகிரியின் சுதந்திர உணர்வுக்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

1938-ஆம் ஆண்டு முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியாரால் பள்ளிகளில் திணிக்கப்பட்ட கட்டாய இந்தியை எதிர்த்து மூண்டெழுந்த முதல் இந்தி எதிர்ப்புப் போரின் போது அழகிரி, திருச்சியிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் அடங்கிய தமிழர் படைக்குத் தலைமை தாங்கி, சென்னைக்கு நடத்திச் சென்றார். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உள்பட தாய்மார்களும் அந்தப் படையில் அணிவகுத்துச் சென்றனர்.

அந்தப் படை, செல்கின்ற வழியில் உள்ள ஊர்களிலெல்லாம் ஆங்காங்குள்ள தமிழுணர்வு படைத்தவர்களால் சிறந்த முறையில் வரவேற்கப்பட்டும்; வழியனுப்பப் பட்டும், இடையிடையே இந்தி எதிர்ப்புப் பிரசாரம் செய்து கொண்டும் சென்னையை அடைந்தது:

அப்பொழுது ஓர் ஊரில் இந்தப் படை செல்கின்ற வழியில் மாற்றுக் கட்சியினர் செருப்புத் தோரணங் கட்டியிருந்தனர். அதைக் கண்டதும், அந்த இடத்திலேயே அழகிரி நின்று பேசத் தொடங்கினார். இந்தச் செருப்புத் தோரணத்தை யார் கட்டினார்களோ, அவர்களே வந்து இதனை அவிழ்க்கும் வரை நான் இந்த இடத்தை விட்டு நகரப் போவதில்லை என்று கூறி விட்டுத் தொடர்ந்து பேசினார். தோரணங் கட்டியவர்களே அவருடைய பேச்சைக் கேட்டு தமிழ் உணர்வு பெற்றவராய் வெட்கித்தலைகுனிந்து தாங்கள் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அந்தத் தோரணத்தை அவிழ்த்தனர்,

இப்படி பல இடையூறுகளும் தொல்லைகளும், தமிழர் படையின் பயணத்தின்போது குறுக்கிட்டதுண்டு. அழகிரி பேசும் கூட்டங்களில் சரமாரியாகக் கற்களும் அழுகிய முட்டைகளும் கூட வீசப்படும். அப்பொழுது அவர் தலையிலே துண்டை எடுத்து முண்டாசு கட்டிக் கொண்டு, "கல்வீசுகிறவனுக்குக் கை வலிக்கும் வரை வீசி விட்டுப் போகட்டும். அதுவரை நான் பேசிக் கொண்டு தான் இருப்பேன்' என்பார்.

இப்படி, கல்லடியும் சொல்லடியும் பெற்றுத்தான் அழகிரி போன்றவர்கள். அந்தக் காலத்திலே இயக்கப் பிரசாரம் புரிந்து வந்தார்கள்.

1948-ஆம் ஆண்டு, மீண்டும்தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு அறப்போர் தொடங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஓமந்தூர் இராமசாமி (ரெட்டியார்) முதலமைச்சராக இருந்த காலத்தில் கல்வியமைச்சர் திரு. அவினாசிலிங்கம் (செட்டியார்) பள்ளிகளில் காட்டாய இந்தியை நுழைத்தார்.

அதனை எதிர்த்துப் போராட்டம் தொடங்குவது பற்றி ஆலோசிப்பதற்காக, சென்னை மீரான் சாகிப் தெருவில் உள்ள பெரியார் மாளிகையில் திராவிடர் கழக நிர்வாக் குழுக் கூட்டம் நடைபெற்றது அதில் உடல் நலங் குன்றிய நிலையில் அழகிரியும் கலந்து கொண்டார். அப்போது, கூட்டம நடந்து கொண்டிருந்த போதே, போலீசார் வந்து அனைவரையும் கைது செய்து சிறைக்கு அழைத்துச் சென்றனர். தந்தை பெரியார். அறிஞர் அண்ணா தி.பொ. வேதாசலம்,குத்தூசிகுருசாமி உட்பட நூறுபேர் கைதானார்கள் அவர்களுடன் அழகிரியும் சிறை சென்றார்.

அதன் பிறகு ஈரோட்டில் நடைபெற்ற திராவிடர் கழகத் தனி மாநில மாநாட்டில் தான் அழகிரி கடைசி முறையாகக் கலந்து கொண்டு பேசினார். அடுத்து அவர் எந்தக் கூட்டத்திலும் கலந்துக் கொள்ள முடியவில்லை

காசநோயால் பீடிக்கப்பட்ட அழகிரி தாம்பரம் மருத்துவமனையில் (சானடோரியம்) சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பெற்று வந்ததைக் கேள்விப்பட்ட அறிஞர் அண்ணா அவர்கள் டபுள்யூ கே. தேவராசன் எஸ் வி லிங்கம் ஆகியோருடன் சென்று அழகிரியைப் பார்த்தார் உடல் மெலிந்து, அடையாளம் தெரியாத அளவுக்குக் காட்சியளித்த அழகிரியைக் கண்டு அண்ணா கண்ணீர் உகுத்தார். அண்ணாவைக் கண்டதும் அழகிரியும் கண்களில் நீர்பெருக, நாதழதழக்க— அன்புடன் "வா அண்ணாத்துரை" என்று கூறி வரவேற்றார்.

அழகிரியை அந்த மருத்துவமனையிலேயே தொடர்ந்து தங்கச் செய்ய எவ்வளவு செலவானாலும், அதனைத் தாம் ஏற்றுக் கொள்வதாக அண்ணா அவர்கள் மருத்துவரிடம் கூறினார் ஆனால் மருத்துவரோ "அழகிரி இனி பிழைக்கமாட்டார் என்ற முடிவை அறிவித்து விட்டார்.

அன்றிரவே அழகிரி மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்பட்டு தஞ்சைக்கு புகைவண்டி மூலம் அனுப்பி வைக்கப்பட்டார்

மருத்துவமனையில் அழகிரியைக் கண்டு விட்டு வந்த அண்ணா அவர்கள், டபிள்யூ கே. தேவராசனிடம் ரூ 250 கடன் வாங்கிக் கொண்டு தாம்பரம் இரயில் நிலையத்திற்கு விரைந்தார். அங்கு இரயிலில் உட்கார்ந்திருந்த அழகிரியைக் கண்டு அவரிடம் அந்தப் பணத்தைக் கொடுத்தார்.

அழகிரி எதிர்பாராத சந்திப்பு இது. அண்ணாவைக் கண்டதும் அழகிரி கண்களில் நீர்வழிய அந்தத் தொகையை இருகைநீட்டிப் பெற்றுக் கொண்டார். இரயில் புறப்பட்டது. வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இருவரும் பிரிந்தனர்.

பிறகு தோழர் மதியழகன் அவர்களிடம் ரூ. 400 கொடுத்து பட்டுக் கோட்டைக்கு அனுப்பி வைத்தார் அண்ணா அத்தொகையைப் பெற்றுக் கொண்ட அழகிரி, மதியழகனைப் பார்த்து

"மதியழகா! பணமல்ல முக்கியம் அதில் மறைந்து கிடக்கிறதே மனம் அதுதான் முக்கியம். பழைய தோழன் ஒருவன் உதவி கிடைக்காமல் உயிருக்குப் போராடிக்கொண்டு கிடக்கிறான்; அவனுக்கு உதவ வேண்டும என்று, மறந்து விடாமல் என்னையும் ஒரு பொருட்டாக மதித்து உதவி செய்ய முன்வந்தானே அண்ணாதுரை, அதற்காக—அந்தப் பேருளளத்தை நான் போற்றுகிறேன். எனது மகிழ்ச்சியைக் கூறு அண்ணாதுரையிடம்" என்றார்.

இந்த உதவியும் போதாது என்பதை உணர்ந்தார் அண்ணா. மேலும் உதவி செய்ய என்ன வழி என்பதை ஆராய்ந்தார். தம்மைக் கூட்டத்துக்கு அழைப்பவர்கள் அழகிரியின் மருந்துச் செலவுக்கென ரூ 100 அனுப்பி, அந்த மணிபார்டர் ரசீதுடன் தமக்குக் கடிதம் எழுதினால், கூட்டத்துக்கு வரத் தேதி தருவதாக அண்ணா அவர்கள் திருச்சியில் நடந்த ஒரு கூட்டத்திலே அறிவித்தார்கள்.

அதன்படி. பலர் அழகிரி பெயருக்குப் பணம் அனுப்ப முனைந்தார்கள். ஆனால், கணிசமான தொகை கைக்குவந்து சேருவதற்குள்ளேயே அழகிரி தமது இறுதி மூச்சை விட்டு விட்டார்.

1949-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இருபத்தெட்டாம் நாள் தஞ்சையிலே அழகிரி இயற்கை யெய்தினார் என்ற செய்தியைக் கேட்டுத் தமிழ் உள்ளங்களெல்லாம் கலங்கின; கண்ணீர் வடித்துக் கதறி அழுதன.

அப்போது சென்னையிலே இந்தி எதிர்ப்பு மறியல் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்ததால் பெரியாரும், அண்ணாவும் தஞ்சை வந்து இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. அப்போது திருவாரூரில் உடல் நலம்குன்றி சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த கலைஞர் சென்று கலந்துக் கொண்டார். மற்றும் தஞ்சை மாவட்டத்தின் கழக முன்னணித்தோழர்கள் அனைவரும்வந்திருந்து அழகிரிக்குத் தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

அழகிரியின் உடல் அலங்கரிக்கப்பட்ட வண்டியில், பல்லாயிரக்கணக்கான மக்கள் உடன் வர, ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அடக்கம செய்யப்பட்டது.

அதன் பிறகு அறிஞர் அண்ணா அவர்களின் விருப்பத்திற்கிணங்க, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தஞ்சையிலே ஒரு கலை நிகழ்ச்சி நடத்தி அதன் மூலம் கிடைத்த தொகையுடன், தாமும் ஒரு பெருந்தொகையைப் போட்டு, ஆறுபிரம ரூபாயை அழகிரியின் குடும்பத்துக்கு அளிததார். அந்தத் தொகையைக்கொண்டு, கடனிலிருந்த அழகிரியின் குடும்பச் சொத்து மீட்கப்பட்டது.

அழகிரிக்கு இராமமூர்த்தி, துலீப் என்னும் இரண்டு பிள்ளைகளும், தயானா, பேபி, புஷ்பராணி என்னும் பெண்களும் இருக்கிறார்கள்.

அஞ்சா நெஞ்சன் அழகிரி தஞ்சையிலே கல்லறையாக இன்று காட்சிபளித்துக் கொண்டிருந்தாலும், அவர், நம் அனைவரது நெஞ்சங்களிலும் நீங்கா இடம் பெற்றுவிட்டார். தமிழ் உள்ளவரை, தமிழினம் உள்ளவரை அழகிரி வாழ்வார்.

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல்நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

உரிமையாளர்
பே. தேவசகாயம்
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
12. அழகர்கோவில் சாலை. 72 டவுன்ஹால்ரோடு, மதுரை.

அவரும் - இவரும்!

அன்று :

தலைமை அமைச்சர் இந்திரா காந்தி என்னை ஒரு சாதாரண எழுத்தர் (கிளர்க்) போல் நடத்திவிட்டார்.

-மொரார்ஜிதேசாய்

இன்று :

தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் என்னை ஒரு கடைநிலை ஊழியர் (பியூன்) போல் நடத்தி விட்டார்.

-சரண்சிங்

இந்திய ரயில்வேயின் சீர்கேடுகள்!

விடுமுறை காலப் பயணச் சலுகைத் திட்டத்தின் கீழ், புது டில்லியிலிருந்து பாட்னு செல்லும் 'அஸ்ஸாம் மெயி லில் பயணம் செய்ய நான்கு முதல் வகுப்பு டிக்கட்டுகளை நான் வாங்கினேன்.

புது டில்லி புகைவண்டி நிலயத்தை நான் அடைந்தேன். 'புதுடெல்லி- பாட்னு- புது டில்லி (New Delhl —Patna New Delhi)' என்ற பெயர்ப் பலகை மாட்டப்பட்டிருந்த பெட்டியில் நான்கு படுக்கைகள் ஒதுக்கப்பட்டன. அதற்கு முன் பரிசோதகர் என்னுடைய டிக்கட்டுகளையும், ரிசர்வேஷனையும்' பிற வற்றையும் சரி பார்த்துக் கொண்டார்.

புகைவண்டி நகர ஆரம்பித்ததுமே முதல் வகுப்பு பெட்டிகள் அனைத்தையுமே 'கும்பல்' ஆக்கிரமித்துக் கொண்டது அவர்களில் பெரும்பான்மையானவர்களிடம் டிக்கட்டுகள் கிடையாது. அவர்களிடமெல்லாம் TTE (டிக்கட் பரிசோதகர்) பணத்தை 'வசூல் செய்து, அப்பணத்தையெல்லாம் தன் 'பை'யிலேயே போட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு நிலையத்திலும் புகைவண்டி நின்றபோதெல்லாம், டிக்கட்வாங்காதவர்கள் பெட்டியை ஆக்கிரமித்துக் கொண்டேயிருந்தார்கள் பரிசோதகரும் தன் பையை பணத்தால் நிரப்பிக் கொண்டே இருந்தார்.

வகுப்புப் பெட்டிகளில்விளக்கு கிடையாது; மின்விசிறி கிடையாது; முதலில் வந்த ரயிலைப் போலவே இதிலும் டிக்கட் வாங்காத ஆசாமிகள் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர்.

வழிநெடுக 'அபாயச் சங்கிலி இழுக்கப்பட்டுக் கொண்டே வந்தது; நடு இரவுக்குப் பிறகு ரயில் பாட்னு நிலையத்தை அடைந்தது—பத்தரை மணி நேரத்தாமதத்திற்குப் பிறகு!

மறுநாள் முசாபர்பூருக்கு நான் கிளம்பினேன். மீண்டும், இங்கேயும் முதல் வகுப்புப் பெட்டிகள் டிக்கட் வாங்காத 'முழுப் புரட்சியாளர்களால்' ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. சமஸ்திபூர் அருகே நடை

புகுந்து கொண்டார்கள். இந்தப் 'போராட்டத்தில்' டிக்கட் வாங்கிய பலர் ரயிலுக்குள்ளிருந்து வெளியே இழுத்தெறியப்பட்டனர்.

அலிகாரிலிருந்து டில்லி வருவதற்குள் அடிக்கடி 'அபாயச் சங்கிலி' இழுக்கப்பட்டு ரயில் ஆங்காங்கே நின்று தனது பயணத்தைத் தொடர்ந்தது.

அந்த இளைஞர்கள் ரயில்வே சர்வீஸ் கமிஷன்' நடத்தும் ஒரு தேர்வில் கலந்து கொள்வதற்காக டில்லியிலிருந்தும் அதன் சுற்று வட்டாரத்திலிருந்தும் அலிகாருக்கு வந்தவர்கள் என்பதைப் பிறகு நான் தெரிந்து கொண்டேன்.

'ரயில்வே சர்வீஸ் கமிஷன்' தேர்வுகள் டில்லியிலேயே நடந்திருந்தால் எவ்வளவோ நல்லதென்பது தேர்வு அதிகாரிகளுக்கு ஏனோ புலப்படவில்லை.

கடைசியாக—

லக்னேவுக்கும் புதுடில்லிக்கும் இடையே ஓடும் 'கோமதி எக்ஸ்பிரஸ்' சில் முதல்வகுப்புப் பெட்டிகள் உள்ளதாக ரயில்வே கால அட்டவணையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் நிலயத்திற்குச் சென்று முதல்

இந்தியாவில் ரயில்களில் பயணம் செய்வது இன்றளவும் ஒரு சோதனையாகவும், 'போராட்டமாக'வும் தான் இருக்கிறது. அயல்நாடுகளோடு ஒப்பிடும் போது ரயில்வேத் துறையில் இன்னும் இந்தியா பின் தங்கிய நிலையில் தான் உள்ளது ஒரு வளரும் நாடான இந்தியா பிறநாடுகளைப் போல் முன்னேற காலம் பிடிக்கத்தான் செய்யும்

அதற்கு முன்- ரயில்வே நிர்வாகம் ஒழுங்காகவும். சீராகவும் செயல்பட்டாக வேண்டும் பயணம் செய்வோரும் தங்கள் பொறுப்புணர வேண்டும்.

கிரீஷ் மிஸ்ரா' என்பவர் 'நியூ ஏஜ்' (9-7-78) ஆங்கில இதழில் எழுதியுள்ள கடிதம் ரயில்வேயின் சீர்கேடுகளை மட்டும் சுட்டிக் காட்டவில்லை; சில பயணிகளின் பொறுப்பின்மையையும் கோடிட்டுக் காட்டுகிறது.

அலகாபாத் வந்ததும் காசு கொடுத்து டிக்கட் வாங்கியவர்கள் அதிகாரியிடம் (Guard) புகார் செய்தார்கள்.

அவரோ, இது குறித்து தான் எதுவும் செய்ய முடியாதென்றும், வேண்டுமானுல் ரயில்வே அமைச்சரையோ, அல்லது ரயில்வே போர்டையோ அணுகும்படி ஆலோசனை கூறி விட்டார்....

இரவு பதினென்றரை மணிக்கு ரயில் 'முகல்சாரி' நிலயததை அடைந்தது. பயணிகள் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டனர். ஏறத்தாழ ஒரு மணி நேரம் கழிந்து ஒரு பலதத குலுக்கல் ஏற்படவே 'அஸ்ஸாம் மெயிலில்' இருந்து நாங்கள் இருந்த பெட்டிகள் கழற்றிவிடப்படுகிறது எனத் தெரிந்து கொண்டோம்

'தூபான் எக்ஸ்பிரஸ்' சோடு நாங்களிருந்த பெட்டி இணைக்கப்பட்டுந்தொடர்ந்து செல்லும் என்று அந்நிலையத்து அதிகாரிகள் சொன்னர்கள்.

'தூபான் எக்ஸ்பிரஸ்' வந்தது. ஆனுல் நாங்களிருந்த பெட்டிகளை இணைத்துக் கொள்ளாமல், தனியே விட்டுவிட்டு; நிலையத்தை விட்டு விரைந்து சென்றது விடிந்தது பெட்டியிலிருந்த பயணிகள் எல்லோரும் 'மூட்டை முடிச்சுகளுடன்' இறங்கினேம்; பாட்னு செல்லும் ஒரு 'பாசஞ்சர்' ரயிலில் ஏறிக் கொண்டோம்.

அந்த ரயிலிலிருந்த முதல்

பெற இருக்கும் விழா ஒன்றில் கலந்து கொள்ளப்போகும் விளையாட்டு வீரர்கள் அவர்கள் என்பதை அவர்களணிந்திருந்த பேட்ஜ் களிலிருந்து தெரிந்துகொண்டேன்.

திரும்ப டில்லிக்கு நான் வந்தபோது ஏற்பட்ட ரயில் அனுபவங்களும் மோசமானதே.

நான் திரும்ப வந்து 'அசாம் மெயில்' அலிகார் நிலயத்தை அடைந்தபோது ஆயிரக் கணக்கான இளைஞர்கள் ரயில் மீது படையெடுத்து உட்

வகுப்பிற்கான டிக்கட் கேட்டால், கிடைக்கும் பதில் "கோமதி எக்பிரஸ்சில் முதல் வகுப்புப் பெட்டிகளே கிடையாது" என்பது தான்.

இந்தப் பயணத்தின் போது கிடைத்த ஒரே பொழுதுபோக்கு என்னவென்ருல் பேராசிரியர்மது தண்டவாதே அமைச்சரானதிலிருந்து ரயில்வே நிர்வாகம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்று 'மாஜி' சோசலிஸ்டு ஆன ஒரு சக பயணி இடைவிடாது 'புகழ்' பாடியது தான்.

ஜாகீர்

இளந்துருக்கியர்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டோனியாவில் நிறுத்தப்பட்டிருந்த மூன்றுவதுபிரிவுப்படை வீரர்களைத் தக்க தருணம் பார்த்து (நெருக்கடியான நேரத்தில்) வேலை நிறுத்தம் செய்யத் தூண்டிவிட வேண்டும் என்பதே அவர்களுடைய திட்டமாகும்! ஒற்றர்கள் இச் சதித் திட்டத்தை வேவு பார்த்து அறிந்து கொண்டார்கள். எனவே 1908-ம் ஆண்டு மார்ச் திங்களில் கான்ஸ்டாண்டி நோபிலிலருந்து ஒரு குழு உண்மை நிலவரங்களை நேரில் கண்டறிந்து புள்ளி விவரங்களைத் திரட்டி வர அனுப்பப்பட்டது

1908-ஆம் ஆண்டிலேயே ஜூலை திங்கள் 3-ம நாள் நியாஜிப புரட்சிக் கொடியை உயர்த்தினுர் அவரேடு பின்னர் என்வர்பே என்பவனும் இணைந்து கொண்டான். ஜூலை 6-ம் நாள் மாசி டோனியாவிலிருந்தும், அல்போனியாவிலிருந்தும் இராணுவத்தைச் சாந்த வீரர்களும், அதிகாரிகளும் தங்கள், தங்கள் பதவிகளைத் துறந்து விட்டு வந்து குவிந்த வண்ணமிருந்தனர். ஆகவே, 1903-ம் ஆண்டு ஜூலை 23-ம நாள் சுல்தானுக்கு இறுதி எச்சரிக்கை வழங்கப்பட்டது "சரணுகதி அடைந்து விடு, இல்லையேல் இஸ்தான்புல் வரை படை பெடுப்போம்" என்பதே யாகும். இறுதியில் சுல்தான் அப்துல் அமீந் சரணடைந்தார்.

ஆகவே சுல்தான் அரசியல் சட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் அளித்து அதை அமுல் படுத்துவதற்கு ஒப்புதலளித்தார். பத்திரிகைகளுக்கு விதித்திருந்த தணிக்கையை ரத்து செய்தார். ஒற்றர்களை வேலையிலிருந்து நீக்கினர். அரசியல் சட்ட வரம்புக்குட்பட்ட ஆட்சியில் கமால் பாட்சாவை பணியாற்ற அழைத்தார், எதிர்ப்பு உதய சூரியனைக் கண்ட பனிபோல் விலகியது. 1908-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் கான்ஸ்டாண்டி நோபிலில் கூடி நாட்டில் ஏற்படுத்தபபட வேண்டிய பல சீர் திருத்தங்களைப்பற்றி விரிவாக விவாதித்து முடிவு கண்டது.

இளம் துருக்கியர்களின் புரட்சியை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு 'பல்கேரியா' தன்னைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது ஆஸ்திரியாவும் அங்கேரியும் அருகிலிருந்த போஸ்னியாவையும், அர்சிகோவினவையும் ஆக்ரமித்து தன் வசமாக்கிக் கொண்டன.

கமால்பாட்சாவுக்கும்;என்வர்பே போன்ற தேசியவாதிகளுக்கும் இடையே எழுந்த பிணக்குகா காரணமாக சுல்தான் இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டு கமால்பாட்சாவை அரசு பொறுப்பிலிருந்து விடுவித்து விட்டார். மேலும் சுல்தான் பழைய பிற்போக்கு கொள்கைகளைப் பின்பற்றி நடக்கஆரம்பித்தார். ஆகவே மீண்டும் என்வர்பேவும், ஒற்றுமை முன்னேற்றக் குழுவும் இணைந்து இரண்டாவது முறையாக ஆட்சியைக் கவிழ்த்தன அதன் விளைவாக சுல்தான் அப்துல் அமீது பதவியிலிருந்து கீழே இறக்கப்பட்டு சிறைப்படுத்தப்பட்டார். புதிய சுல்தானுக ஐந்தாம் முகம்மது என்பவர் 1909-ஆம் ஆண்டு முதல் 1918-ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்து வந்தார். 1909-ஆம் ஆண்டு முதல் 1918-ஆம் ஆண்டுவரை துருக்கி சுல்தானின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்று கூறுவதைவிட இளம் துருக்கியர்களின் சர்வாதிகார ஆட்சிக்குஉட்பட்டிருந்தது என்பது தான் பொறுத்தமாகும்! இளம் துருக்கியர்கள் தீவிர தேசியக் கொள்கைகளைப் பின்பற்றி ஆட்சி செய்தார்கள். நாட்டின் தேசிய மொழியாக 'துருக்கி' ஏற்றுக்கொள்ளப் பட்டது. தேசியப் பள்ளிகள் ஆங்காங்கு நிறுவப்பட்டன. நாட்டிற்காக ஒவ்வொரு துருக்கிய குடிமகனும் கட்டாய இராணுவ சேவை செய்யும் திட்டமும் முதன் முதலாக அமுல்படுத்தப்பட்டது இவைகளே இளம் துருக்கியர்கள் ஆட்சியில் ஏற்பட்ட மகத்தான சாதனைகளாகும்!

தியாகச் சுடர் காமராசர்!



'கர்மவீரர்' என்றும் 'காந்தியின் வாரிசு' என்றும், 'படிக்காத மேதை' என்றும், 'பச்சைத் தமிழர்' என்றும் தமிழ்நாட்டு மக்களால் போற்றப்பட்டு, உண்மை உழைப்பால். தியாகத்தால், அகில இந்தியத் தலைவராகவும் உயர்ந்து, தம் வாழ்நாள் முழுவதும் நாட்டு நலனுக்காகவே பணியாற்றிய தியாகச்சுடர் காமராஜரின் பிறந்த நாள், ஜூலை 15-ஆம் நாளாகும்.

இந்த நாளில் அவரை நினைவு கூர்ந்து அவர் பெயரும் புகழும் 'வாழ்க வாழ்க' என வாழ்த்துவோமாக.

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

கலைஞர் கடிதம். . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்கள்! வாழ்க புனித ராஜ்யம்! வெல்க புனித ராஜ்யம்!

அண்ணுச்சி: சரி, மதுவை ஒழிச்சாச்சு! மேலும் ஒழிக்க வழியும் கண்டு பிடிச்சாச்சு! இனி அடுத்தது ஊழலை ஒழிப்பது — அதற்கு அடுத்தது லஞ்சத்தை ஒழிப்பது —

பொடியன்: ஆமாம் அண்ணுச்சி; ஊழலைஒழிக்க நீ வழி சொல்லு! லஞ்சத்தை ஒழிக்க நான் வழி சொல்கிறேன்!

அண்ணுச்சி: முதல்ல நீ சொல்லுடா லஞ்சத்தை ஒழிக்கிற வழியை!

பொடியன்: (பாடுகிருன்)

'சொல்லட்டுமா? சொல்லட்டுமா? சுவையான ஒரு வழியைச் சொல்லட்டுமா? கள்ள மார்க்கெட்டு கறுப்பு மார்க்கெட்டுகொள்ளை மார்க்கெட்டு எல்லா மார்க்கெட்டும்துள்ளிக் குதிக்கும் வழியைச் சொல்லட்டுமா? சொல்லட்டுமா? சொல்லட்டுமா? சுவையான ஒரு வழியைச் சொல்லட்டுமா?

(பாட்டு முடிகிறது)

அண்ணுச்சி: சொல்லுடா! சொல்லு!

பொடியன்; சொல்றேன்! அண்ணுச்சி! உலகத்திலே எவனுமே லஞ்சம் வாங்க முடியாமல் எல்லா லஞ்சத்தையும் நாமே வாங்கி விட்டால் லஞ்சம் ஒழியுமா? ஒழியாதா?

அண்ணுச்சி: அச்சா! பகுத் அச்சா! அருமையான யோசனை.

பொடியன்; சரி! ஊழலை ஒழிக்க நீ வழி சொல்லு!

அண்ணுச்சி: ஒரு வழியா இரண்டு வழியா? கப்பல் கப்பலா இருக்கு வழி! மதுவைக் குடிச்சே ஒழிப்போம்! லஞ்சத்தை வாங்கியே ஒழிப்போம்! ஊழலைச் செய்தே ஒழிப்போம்! ஏ, பொடியா: ஐயாயிர ரூபாய் எனக்கு லஞ்சமாகக் கொடு? அதை வாங்கிக் கொள்வதின் மூலம் நான் லஞ்சத்தை ஒழிக்கிறேன், நீ சும்மா கொடுக்க வேண்டாம் — உன்னை ஒருதொகுதியின் அபேட்சகராக்க — அதாவது சீட்டு வாங்கித்தர பிரதியுபகாரமாக அதைக் கேட்கிறேன். உனக்குச் சீட்டு கிடைச்சால் பிறகு நமது முறைப்படி நீ ஊழலை ஒழிக்கலாம் அல்லவா?

பொடியன்: அட, போ— அண்ணுச்சி! நான் இப்பத்தான் ஒருத்தன்கிட்ட அவனுக்குச் சீட்டு வாங்கித் தர்ரேன்னு நாலாயிர ரூபாய் வாங்கிட்டு வர்ரேன்; நீ எங்கிட்டேயே கேட்கிறே!

அண்ணுச்சி: பலே, கில்லாடிடா. பொடியா! ஆனு ஒண்ணு நினைவிலேயே வச்சுக்கோ! நம்ப, லஞ்சம்வாங்குறதையும்ஊழல் செய்றதையும், மறைக்கணும்னு ஒருமித்த குரலில் நாம் சொல்லிக் கொண்டே யிருக்கணும்.

பொடியன்: என்ன அண்ணுச்சி?

அண்ணுச்சி: "லஞ்சத்தை ஒழிப்போம்! ஊழலை ஒழிப்போம்!" இதைச்சொல்லிகிட்டே இருந்தாத்தான் ஊரை ஏமாற்ற முடியும், இந்திரா காந்தி, பன்சிலால், சஞ்சய் காந்தி, இவுங்கல்லாம் இப்படியே சொல்லிட்டுத்தானே ஊரை ஏமாத்திகிட்டு இருந்தாங்க?

பொடியன்: ஆமு, அவங்க அகப்பட்டுக் கிட்டாங்களே!

அண்ணுச்சி: சே! அறையப் போறேன்; அதைச் சொல்லாதேடா! வாடா! வா!

(என்றவாறு அண்ணுச்சி, பொடியனைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு ஓடுகிருன். திரை விழுகிறது.)

உடன் பிறப்பே, முதல் காட்சியோடு இன்று நிறுத்திக் கொள்வோம்- அடுத்தடுத்த காட்சிகளை பிறகு, கண்டுகளிக்கலாம்

இப்போது நமது பணிகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. வா, போகலாம்!

அன்புள்ள

பெரியார்-அண்ணு கனவை நனவாக்குவார்களா?

தந்தை பெரியார் அவர்களின் நூருவது ஆண்டு பிறந்த நாளை நாடே கொண்டாட இருக்கிறது. அத்துடன் தமிழக அரசும் சேர்ந்து கொண்டாடப் போவதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. மிக்க மகிழ்ச்சி

ஐயாவின் நூற்ருண்டு விழாவினையொட்டி ஐயாவின் உயிர்மூச்சுக் கொள்கையான சாதி ஒழிப்புத் திட்டத்திற்கு ஆக்கம் தரும் ஒரு நல்ல காரியத்தை நமது அரசு நிறைவேற்ற முன்வரும் என்ற நம்பிக்கையில் இதனை வரைகின்றேன்

1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணு ஆட்சி ஏற்பட்ட பின் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கமும், உதவிப் பணமும் வழங்க அண்ணு அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்

சாதியை ஒழிக்கக் கலப்பு மணமே சிறந்த வழி என்பதை உணர்ந்து அண்ணு அவர்களும், அண்ணுவைத் தொடர்ந்து கலைஞர் அவர்களும். கலப்பு மணத் தம்பதிகளை ஊக்குவித்து வநதார்கள். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் செய்யாத இந்த நற்காரியத்தை தி மு க. அரசு செய்து மற்றவர்களுக்கும் வழிகாட்டியது.

1967-ஆம் ஆண்டுக்கு முன் தந்தை பெரியாரின் சீர்திருத்தப் பிரசாரத்தின் பலனுகக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களும் இருக்கிருர்கள். அவர்களில் தறபோது வாழ்ந்து வருபவர்கள் சுமார் 100 பேருக்கு மேல் இருக்க மாட்டார்கள். எனவே அவர்களுக்கும் பாராட்டு வழங்குவதுடன், அரசு ஊழியத்தில் இருப்பவர்களுக்கு மாதம் ரு 75-ம், அரசு ஊழியத்தில் இல்லாதவர்களுக்கு மாதம் ரூ. 200-ம் உதவிப் பணமாக வழங்க வேண்டும்.

1967 முதல் 1977 வரை கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் சுமார் 1000 பேர் இருப்பார்கள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளை இவர்களுக்கும் (1967-க்குமுன் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு) வழங்கவேண்டும்.

தற்போது கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கள் ஒருவரை ஒருவர்காதலித்தோ அல்லது வருமான அடிப்படையிலோ மணந்து கொள்கிருர்கள் 1967-க்கு முன் செய்து கொண்டவர்கள்; ஐயா, அண்ணு கொள்கைகளின் அடிப்படையில் தியாக உணர்வுடன் செய்து கொண்டவர்கள் ஆவார்கள். அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள்,-

1. படித்திருந்தாலும் இல்லாவிட்டாலும் கடைநிலை ஊழியர் போன்ற வேலை கொடுத்தல்.

2. எஸ். எஸ். எல். சி. அல்லது பி. ஏ. போன்ற படிப்புக்கேற்ற - சர்வீஸ் கமிஷன் தேர்வில்லாவிட்டாலும் — வேலை கொடுத்தல்.

3 அரசு ஊழியர்கட்கு தியாகி மான்யம் வழங்குவது போல் ரூ 75 வீதம் ஆயுட்காலம் வரை வழங்குதல்.

4 அவர்கட்கு வீடுகட்ட அல்லது வாங்க, குறைந்த வட்டியில் கடன் வழங்குதல்

5. 'மத்திய அரசுப்பணியில் தாழ்த்தப்பட்ட மலை சாதி மக்களுக்கு 1, 2 உத்தியோகச் சலுகைகளில் பதவி உயர்வு கொடுப்பதைப்போல் தமிழக அரசும் கொடுக்கவேண்டும். பதவி உயர்வு இல்லையெனில் அதற்குரிய சம்பள உயர்வேனும் கொடுக்கவேண்டும்.

5 விவசாயிகளாயிருப்பின் விளை நிலம் தரவேண்டும்.

முக்கிய குறிப்பு இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் தற்போது உள்துறையமைச்சராக இருந்து விலகியுள்ள சரண்சிங், பண்டித நேருவுக்கு எழுதிய கடிதத்தில் கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்குப்பதவி உயர்வும் சிறப்புச்சலுகைகளும் வழங்கவேண்டும் என்று கோரியிருக்கிருர். டெல்லியில் நடந்த ஒரு சமூக நிகழ்ச்சியில் இது பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. மேலே குறிப்பிட்ட சலுகைகளைப் பெறும் கலப்பு மணத் தம்பதிகளில் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கலாம்.

இதனை இன்றைய அரசு செய்யுமா? ஐயா, அண்ணு கண்ட கனவுகளை நிறைவேற்றுமா?

கே. கருணுகரன்
வில்லிவாக்கம்.

உங்கள் காதுக்கு மட்டும்!

என்று வருமோ காசோலை'

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு நாங்களும் விழா எடுக்கிருேம் என்று பறைசாற்றிக் கொள்வதற்காக அ. தி மு. க அரசு கடந்த ஏப்ரல் மாதம் ஒரு விழா' நடத்தியதல்லவா? அப்போது கவிஞர் சுரதாவுக்கு விருது வழங்கி பத்தாயிரம் ரூபாய் பணமும் அளிப்பதாக முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டதல்லவா? கவிஞர் சுரதாவுக்குப் பாராட்டுவிருது வழங்கப்பட்டது உண்மை. ஆனுல் பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டுவிட்டதா? காசோலை நாளையே வீடு தேடி வரும் என்று முதலமைச்சர் சுரதாவிடம் சொன்னுராம்; அன்று முதல் காசோலை வரும் என்று வழியிலே விழிவைத்துக் காத்திருக்கிருராம் உவமைக் கவிஞர்; இன்றுவரை வந்தபாடில்லையாம்.

இன்னும் எத்தனை பேர்களோ!

ஆளுங்கட்சி எம். எல்.ஏ. ஒருவரை தற்செயலாகக் காணநேர்ந்தது அவர் பழைய பாசத்தோடும் அன்போடும் நலம் விசாரித்தார். அவருடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தபோதே அவருடைய உள்ளக்கிடக்கை வெளிப்பட்டது. "என்ன இருந்தாலும் கலைஞர் கலைஞர்தான். என்னமோ போதாதகாலம் நாங்கள் இங்கு (அ தி. மு. க.) வந்துவிட்டோம். நாங்கள் மீண்டும் கலைஞர் தலைமையை ஏற்கக்கூடிய காலம் வராமல் போகாது" என்று அவர் உள்ளத்தைத் திறந்து கூறினுர். அவரைப்போல இன்னும் எத்தனை எம். எல். ஏக்கள் அங்கு இருக்கிருர்களோ

—'சேனு'

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராயண செட்டி தெரு. இராயபுரம். சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104.B அண்ணுசாலை, தேனும்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009